# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஜுன் 2008 ஜீவியம் 14 மலர் 2**

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 2 |
| இம்மாதச் செய்தி | 3 |
| லைப் டிவைன் | 4 |
| அன்பர் கடிதம் | 12 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 15 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 18 |
| சாவித்ரி | 23 |
| ஆன்மாவை அழைத்தல் | 25 |
| லைப் டிவைன் - கருத்து | 28 |
| முன்னேற்றம் தரக்கூடிய சாதனை | 30 |
| மலரும் மணமும் | 33 |
| எட்டு மாற்றங்கள் (Eight Reversals) | 43 |
| அஜெண்டா | 51 |
| யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 53 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

எண்ணம் எழுந்து வெளி வரும் பொழுது மீண்டும் அதை உள்ளே அனுப்ப முடிவது மௌனம்.

எண்ணம் எழாத மௌனம் மனதைக் கடந்த மௌனம்.

தானே வருவதைத் தவிர்க்கக் கூடாது என்பது அன்னை சட்டம்.

எப்படிப் போனாலும் அன்னை சம்பந்தப்பட்ட விஷயம் நல்ல-தாகவே முடியும்.

## தமிழ்நாட்டுப் பழமொழிகளும், ஸ்ரீ அரவிந்தமும்

*(மார்ச் 2008 இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

31. *கற்றலின் கேட்டலே நன்று.*

    ❋ **கேள்வியைவிட ஞானம் உயர்ந்தது.**

32. *குலவிச்சை கல்லாமல் பாகம்படும்.*

    ❋ **பயில வேண்டிய பகுதியை எடுத்து மௌனத்திற்கு சமர்ப்பித்தால் பலன் இதை விளக்கும்.**

33. *பாம்பறியும் பாம்பின் கால்.*

    ❋ **சமர்ப்பணம் பிரச்சினையின் வழியையும், மூலத்தையும் அறியும்.**

34. *அறிவில்லாதவர்களுக்கு நகரமும் காடு போன்றதே.*

    ❋ **ஆர்வமற்றவர்க்கு அன்னைச் சூழலும் அர்த்தமற்றதாகும்.**

35. *பரிசழிந்தாரோடு தேவரும் ஆற்றல் இலர்.*

    *(கொடை கொடுப்பவர்முன் தேவரும் தங்கள் ஆற்றலை இழப்பார்கள்).*

    ❋ **தம்மை அர்ப்பணம் செய்பவர் (Self-giving) முன் தலைவரும் பணிய வரும்.**

தொடரும்....

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**கண்ணுக்குத் தெரிந்த சேவை நம்மை உயர்த்தும்.**

**தெரியாமல் செய்யும் சேவை புனிதப்படுத்தும்.**



## இம்மாதச் செய்தி

**கருத்து மனத்தில் திரளும்பொழுது**

**எழுத்து கனக்கும்.**

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XVII. The Divine Soul

Sachchidananda has a conscious play. Page No.151
The divine soul will be self-contained. Para No.3
The existence of a divine soul
will meet these two conditions.
The divine soul would be pure.
It would be infinite self-existence in its being.
It exists in the becoming too.
It would be a free play of immortal life.
It would be uninvaded by death and birth.
It would not be affected by change of body.
It would be unclouded by ignorance.
It will not be involved in the darkness of our material being.
It would be a pure and unlimited consciousness in its energy.
It would be poised in an eternal and luminous tranquility.
It is its foundation.
Yet it will be able to play freely with forms.
They are forms of knowledge and forms of conscious power.
It will be tranquil and unaffected.



## 17. தெய்வீக ஆன்மா

சச்சிதானந்தம் தன் லீலையை அறியும்.
தெய்வீக ஆன்மா அனைத்தையும் தன்னுட்கொண்டது.
தெய்வீக ஆன்மா இருப்பதே இந்த இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி
செய்யும்.
தெய்வீக ஆன்மா தூய்மையானது.
அதன் சுயவாழ்வு அனந்தமானது. அதுவே அதன் ஜீவன்.
அது பிரகிருதியிலும் உள்ளது.
அழியாத வாழ்வின் சுதந்திரமான லீலை அது.
பிறப்பும், இறப்பும் அதன் வாழ்வில் நுழைய முடியாது.
உடல் மாறுவதால் அது மாறாது.
அஞ்ஞானம் அதை இருளாக மறைக்காது.
நம் ஜடமான ஜீவனின் இருளில் அது கலந்துகொள்ளாது.
அது தூய்மையானது. அதன் சக்திக்கு அளவில்லை.
ஜோதிமயமான அதன் அமைதி காலத்தைக் கடந்தது.
அதுவே அதன் அடிப்படை.
இருந்தாலும் அதனால் ரூபலீலை செய்ய முடியும்.
ஞானத்திற்கும், அதிகாரத்திற்கும் ரூபமுண்டு.
அது அமைதியானது, பாதிக்கப்படாதது.

The stumblings of mental error leave it unaffected.
The misprisions of our striving will too will not affect it.
It never departs from truth and oneness.
Never does it fall from its inherent light.
It has its natural harmony of its divine existence.
It would be pure inalienable delight.
It has its eternal self-experience.
In Time it has a free variation of bliss.
It is unaffected by our perversions of dislike, hatred, discontent and suffering.
It is undivided in being, unbaffled by erring self-will.

It is unperverted by the ignorant stimulus of desire.

Its consciousness would not be shut out from any part of the infinite truth. Page No.151 Para No.4
Nor is it limited by any poise or status.
The status permits it to assume a relation.
Nor is it condemned to any loss of self-knowledge.
Self-knowledge is lost by accepting phenomenal individuality.
Phenomenal individuality comes from the play of practical differentiation.
The Divine soul has a self-experience.
In it, it lives eternally in the presence of the Absolute.

To us the Absolute is an intellectual conception.
It is of indefinable existence.
The Brahman is higher than the highest, *paratpara*.
The intellect tells us of that Brahman.
It is an Unknowable that knows itself.



மனம் தடம் புரள்வதால் அது மாறாது.
நம் உறுதியின் தடுமாற்றம் அதைப் பாதிக்காது.
சத்தியம், ஒருமையினின்று வழுவாது.
பிறப்புடன் வந்த ஜோதியினின்று பிறழாது.
இறைவன் வாழ்வுக்குரிய இயல்பான சுமுகம் உண்டு.
தூய்மையான விலகாத ஆனந்தமது.
அதன் சுயானுபவம் காலத்தைக் கடந்தது.
காலத்துள் அதன் ஆனந்தம் சுதந்திரமாக மாறக்கூடியது.
நம் குதர்க்கம், வெறுப்பு, அதிருப்தி, வேதனை அதைப் பாதிக்காது.

அதன் ஜீவன் முழுமையானது. தவறும் நம் சுய உறுதியால் அது குழப்பமடையாது.
ஆசையின் அறியாமை வேகம் அதை குதர்க்கமாக்காது.

அனந்தமான சத்தியத்திலிருந்து எப்பகுதியும் அதற்கு விலக்கன்று.

எந்த நிலையும் அதைக் கட்டுப்படுத்தாது.
அந்த நிலை இந்தத் தொடர்பை அனுமதிக்கிறது.
அதனால் சுயஞானம் குறைய வேண்டும்என்ற அவசியமில்லை.
தோற்றத்திற்குரிய தனித்தன்மையை ஏற்றால் சுயஞானம் போகும்.
நடைமுறை வேறுபாடுகள் தோற்றத்தின் தனித்தன்மையை அனுமதிக்கிறது.

தெய்வீக ஆன்மாவுக்கு சுய அனுபவம் உண்டு.
அந்த அனுபவத்தில் பிரம்மத்தின் முன்னிலையில் யுகாந்த காலமாக அது வாழ்கிறது.
நமக்கு பிரம்மம்என்பது சிந்தனையில் எழும் எண்ணம்.
அது விவரிக்க முடியாத வாழ்வு.
உச்சகட்ட உயர்வைவிட உயர்ந்தது பிரம்மம் - *பராத்பரா.*
நம் அறிவு அப்பிரம்மத்தை நமக்குக் காட்டுகிறது.
அறிய முடியாதது தன்னையறியும் பாணியது.

It knows in another fashion than our knowledge.
The intellect cannot bring us into its presence.
The divine soul lives in the Truth of things.
It will always have the conscious sense of itself.
In that sense it knows itself as the Absolute.

It has an immutable existence.
It would be aware of its original form, *swarupa*.
It is the original form of the Transcendent – Sachchidananda.
It would be aware of its play of conscious being.
It is a manifestation of That.
It is in the forms of Sachchidananda it is manifested.
It would be aware of the Unknowable.
It would be so aware in every state of knowledge.
Also in every state of act, it would be aware of That.

Thus the Unknowable cognizes itself.
It does so by a form of variable self-knowledge.
It would be aware of the Absolute in its every state or act of power.
It is equally so in its will or force aware of the Transcendence possessing itself.
It does so by a form of conscious power of being and knowledge.
In its every state or act of delight, joy or love, aware of the Transcendence embracing itself by a form of conscious self-employment.
The presence of the Absolute will always be with the divine soul.
It is not an act of an occasional glimpse.
Nor is it arrived at finally at the end of a long process.
The divine soul will not hold it with difficulty.



நாம் அறியும் பாணியிலிருந்து அந்த பாணி வேறுபடும்.
நம் அறிவு அந்த தெய்வீகச் சூழலில் நம்மைக் கொண்டு வாராது.
தெய்வீக ஆன்மா பொருள்களின் சத்தியத்தில் உறைகிறது.
தான் யாரென அறியும் உணர்வு அதற்கு எப்பொழுதும் உண்டு.
அந்தக் கோணத்தில் பார்த்தால் தெய்வீகஆன்மா தன்னை பிரம்மமாக அறியும்.
அதன் வாழ்வு மாற்றமில்லாதது.
அதற்கு, தன் ஆதியான ரூபம் தெரியும், *ஸ்வரூபம்.*
அது கடந்ததின் ஆதிரூபம் – சச்சிதானந்தம்.
தன்னையறியும் ஜீவனின் லீலையை அது அறியும்.
அது பிரம்மத்தின் – ‘அது’ – வெளிப்பாடு.
அது சச்சிதானந்த ரூபமாக வெளிப்படுகிறது.
அறிய முடியாததை அது அறியும்.
எல்லா வகை ஞானங்களிலும் தெய்வீகஆன்மாவுக்கு அந்த ஞானமிருக்கும்.
எல்லா நிலைக்குரிய செயல்களிலும் தெய்வீக ஆன்மாவுக்கு அந்த ஞானமிருக்கும்.
அவ்விதம் அறிய முடியாதது தன்னையறியும்.
மாறிவரும் ஞானத்தால் தெய்வீகஆன்மா அதைச் சாதிக்கிறது.
எல்லா சக்தி வெளிப்பாடுகளிலும், எல்லாச் செயல்களிலும் தெய்வீகஆன்மாவுக்கு பிரம்மம் தெரியும்.
உறுதி அல்லது சக்தி கடந்தது தன்னைப் பெற்றிருப்பதிலும் அது உண்மை.

தன்னையறியும் ஜீவனின் சக்தியின் ரூபத்தால் அதைச் சாதிக்கிறது.
அதற்குப் பல அனந்தமான செயல்களுண்டு. அது கடந்ததை அறியும். தன்னை அறியும். சுயஆனந்தத்தால் அதைச் செய்கிறது.

தெய்வீகஆன்மாமுன் பிரம்மம் எப்பொழுதும் இருக்கும்.
ஏதோ ஒரு சமயம் மின்னலாக வெளிப்படுவதில்லை.
நீண்ட பெருமுயற்சியால் செய்து முடிக்கும் காரியமுமில்லை.
தெய்வீகஆன்மா தன்னைச் சிரமப்பட்டுக் காப்பாற்றிக்கொள்வதில்லை.

It is neither an addition nor an acquisition or culmination.
Nor is it superimposed on its ordinary state of being.
It would be the very foundation of its being.
It is the foundation in unity and in difference.
It would be present to it in all its acts.
In its knowing, willing, doing, enjoying it will be there.
It will not be absent from its timeless self.
Nor from any moment of Time, will it be absent.
It will not be absent from its spaceless being.
Nor is it absent from any determination of its extended existence.
It has an unconditioned purity beyond all cause and circumstance.
Nor is it in any relation of circumstance, condition and causality.
This constant presence of the Absolute would be the basis of its infinite freedom and delight.
It ensures its security in the play.
It provides the root and sap and essence of its divine being.

*Contd....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒவ்வொரு நிலை அதிர்ஷ்டத்திற்கும் வேறு பெயருண்டு. ஜடத்தில் அது அதிர்ஷ்டமாகும். உணர்வில் புகழாகும். மனதில் ஞானோதயமாகும். ஆன்மாவில் அருள் எனப்படும். சத்தியஜீவியத்தில் அதைப் பரிணாமம் என்போம்.

***புகழும், அருளும், பரிணாமமும்***
***அதிர்ஷ்டத்தின் பல நிலைகளாகும்.***



புதியதாகச் சேர்ந்ததோ, முடிவாக ஏற்பட்டதோ, தானே பெற்றதோ இல்லையது.
சாதாரணநிலைமீது திணிக்கப்பட்டதுமில்லை.
ஜீவனின் அஸ்திவாரமிது.
அது ஒருமையில் பன்மைஎன்ற அஸ்திவாரம்.
எல்லாச் செயல்களிலும் அது இருக்கும்.
அறிவது, முயல்வது, செய்வது, அனுபவிப்பது ஆகியவற்றுள் அது இருக்கும்.
காலத்தைக் கடந்த புருஷனில் அது இல்லாமலிருக்காது.
காலத்தின் செயலிலும் அது இல்லாமலிருக்காது.
இடத்தைக் கடந்த நிலையிலும் அது இருக்கும்.
அதன் வாழ்வின் வீச்சின் முடிவிலும் இருக்கும்.
எல்லா சந்தர்ப்பங்களைக் கடந்த நிலைகளிலும் அது இருக்கும்.
காரண, காரியம் உள்ள இடங்களிலும் அது இருக்கத் தவறுவதில்லை.
அதற்கு அனந்தமான சுதந்திரமும், ஆனந்தமும் உண்டு. அதன் அடிப்படை இதுவே.
அதன் லீலை அதன் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கிறது.
வேர், சாரம், சத்தை அது தரும்.

**தொடரும்.....**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உடலின் தேவை, உணர்வின் ஆசை, மனத்தின் அபிப்பிராயம் ஆகியவற்றைப் பூர்த்தி செய்தால் மனிதனுக்கு மனதில் பிணக்கொழியும். கொஞ்சம் தேவைகள் குறைவதால், கொஞ்சம் சக்தி சும்மாயிருப்பதால் மனிதனுக்குப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

***கரணங்கள் குறைவாக, நிறைவது பிரச்சினைக்கு அஸ்திவாரம்.***

## அன்பர் கடிதம்

*ஓம் மதர் ஸ்ரீ அன்னை!*
*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*
*ஓம் ஆனந்தமயி சைதன்யமயி சத்தியமயி பரமே!*

ஸ்ரீ அன்னையின் பாதகமலங்களில் பணிந்து இக்கடிதத்தை சமர்ப்பிக்கின்றேன்.

எனக்கு ஸ்ரீ அன்னையை, 1991ஆம் ஆண்டில் என் வீட்டின் அருகில் இருந்த அன்னைஅன்பர், அறிமுகம் செய்து புத்தகங்கள் கொடுத்தார். அவ்வமயம் என் மகன் ஏழாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். அவன் படிப்பில் பின்தங்கியிருந்த நேரம் ஸ்ரீ அன்னையின் புத்தகங்கள் ஆறுதலாக இருந்தது. அதன் பிறகு என் மகனின் கல்வியில் சிறிது சிறிதாக முன்னேற்றம் காணப்பட்டது ஸ்ரீ அன்னையின் அருளால்தான். அவன் +2 தேர்வில் total marks 82%, main subjectல் 85% எடுத்ததும் ஸ்ரீ அன்னையின் திருவருளே. அதன் பிறகு அவனுக்கு B.E.இல் admission கிடைத்தது.

B.E. முதலாம்ஆண்டு முடிவு சமயத்தில் அவனை மஞ்சள் காமாலை நோய் தாக்கி, சுமார் ஒரு மாத காலம் சிகிச்சை செய்தும் குறையவில்லை. மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறும் நிலைக்கு வந்துவிட்டது. அப்போதெல்லாம் சாவித்ரியைப் படிப்பது, அன்னையைப் பிரார்த்திப்பதுமாக இருந்தேன். மனம் மிகவும் வேதனையுற்று அன்னையிடம் கூறினேன். ஸ்ரீ அன்னையின் கருணையால் அவனுக்கு மறுஜென்மம் கிடைத்தது. அது முதல் அவனை அன்னையின் குழந்தையாகவே வரித்துவிட்டேன். உயிர் கொடுத்த அன்னைக்குத்தான் அவன் சொந்தம்என்று தினமும் அன்னையிடம் கூறுவேன். இவ்வருள் பிரவாகம் என் வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாதது.

ஒரு சமயம் எங்கள் வீட்டில் ஏ.சி. வாங்கி பொருத்த உத்தேசித்து, ஸ்ரீ அன்னையிடம் சமர்ப்பித்து, அவர் உத்தரவுக்காகக் காத்திருந்தோம். 3 நாட்கள் கழித்தபின்னர் என் கணவர் ஸ்ரீ அன்னையின் பதில் கிடைக்கவில்லையேஎன சொல்லிக்கொண்டு இருந்த சமயம், என் சகோதரன் திடீரென்று எங்களுக்கு போன் செய்து, ஏர் கூலர் வேண்டாம், ஏ.சி. பொருத்திவிடுங்கள்எனச் சொன்னான். இதனை அன்னை பதிலாக ஏற்று மகிழ்ச்சி அடைந்தோம்.

என் மகனுக்கு B.E.ல் 72% கிடைக்கப் பெற்றது ஸ்ரீ அன்னையின் அருளே. 2002இல் B.E. முடித்ததும் வேலைக்கு மனு செய்துகொண்டிருந்தான். ஏதும் கிடைக்கவில்லை. அவ்வமயம் என் சகோதரியின் கணவர் அவருக்குத் தெரிந்த கம்பெனியில் Traineeஆக சேர்த்துவிட்டார். சம்பளம் ஏதும் இல்லைஎன்றும் சொன்னார். ஆனால் மகன் experience கிடைத்தால் போதும்என அக்கம்பெனியில் வேலை செய்ய ஆரம்பித்தான். ஒரு வருடம் கழித்து அவர்கள் salary கொடுக்க ஆரம்பித்த சமயம் (2003ஆம் ஆண்டு) அவனுக்கு சிங்கப்பூர் University மேற்படிப்புக்கு (M.S.) அட்மிஷன் கிடைத்தது. இது எங்கள் வாழ்க்கையில் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. M.S. முடித்து 2 மாதங்களில், 2005ம் ஆண்டில், அங்கு ஒரு நிறுவனத்தில் வேலை கிடைத்தது. இதுவும் அன்னையின் அருளால் தான்.

இப்போது எங்களுக்குத் தெரிந்த குடும்பத்திலிருந்து ஒரு பெண் அவனுக்கு நிச்சயம் செய்ய உள்ளோம். திருமண நிச்சயதார்த்தம் 25.11.07 அன்று நடைபெற்றது. அப்பெண் நல்ல பெண். M.Sc. படித்து வருகிறாள். இந்த ஆண்டு அவனுடைய திருமண நிச்சயதார்த்தம் நடக்கும்என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நல்ல குடும்பத்திலிருந்து, நல்ல படித்த பெண்ணை ஸ்ரீ அன்னை அவர் குழந்தைக்கு நிச்சயம் செய்கிறார்என்று மகிழ்ச்சி அடைகிறோம்.

இன்று என் மகன் சிங்கப்பூரிலிருந்து போன் செய்தான். அவனுக்கு Intel Computer நிறுவனத்தில் 3400 டாலர் சம்பளத்தில் வேலை கிடைத்திருப்பதாகச் சொன்னான். இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் எங்கள் கையைப் பிடித்து அழைத்துச் சென்று தமது அருள் மழையை எங்கள் மேல் பொழியும் அன்னைக்கு நன்றி கூற இந்த ஒரு ஜென்மம் போதாது.

அவனுடைய ஆரம்ப நிலைக்கும், தற்போதுள்ள நிலைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய முன்னேற்றம் அன்னையின் பேரருளே! அது ஸ்ரீ அன்னைக்கு உரித்தானது. முடிந்தவரை அன்னையின் அறிவுரை, Life Response ஆகியவற்றைக் கடைப்பிடிக்-கிறேன்.

ஸ்ரீ அன்னையின் பாதகமலங்களில் பணிந்து கோடானுகோடி நன்றியையும், வணக்கத்தையும் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பெரிய நல்லது நம் குறையை மீறி நடப்பது. நம் குறைகளைத் தாண்டி அதிகபட்சம் நடக்கக்கூடியதே. சொல்லப்போனால், நம் குறைகள் நம் கண்மூடித்தனத்தால் திசை மாறிய நேரம் நல்லவை நடக்கின்றன.

***பெரிய நல்லது நம் குறையை மீறி நடப்பது.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூகம் மனிதனுக்கு எந்த அளவு பாதுகாப்பளிக்கிறது, அவன் ஆசைகளையும் அபிலாஷைகளையும் எந்த அளவுக்கு ஆமோதிக்கிறது என்பவை மனிதனுடைய ஆழ்ந்த நோக்கங்களை நிர்ணயிக்கின்றன.

***ஆழ்ந்த நோக்கங்களை ஆமோதிப்பது சமூகம்.***



## ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N. அசோகன்**

222. சிறு உடல் குறைபாடுகளை நாம் அதிகமாக கவனித்தால், அவையே பெரிய குறைபாடுகளாக மாறிவிடும். அதே சமயத்தில் ஆபத்தான அறிகுறிகளைக் கவனிக்காமல் போனால், உயிருக்கே ஆபத்து வரும். ஆகவே எதை கவனிப்பது, எதை உதாசீனம் செய்வதுஎன்பது பற்றி நமக்கு ஒரு நல்ல விவேகம் வேண்டும்.

223. ஆன்மீக ஒளி மற்றும் அமைதி நம் உடம்பில் இறங்கினால் உடல்நலக் குறைபாடுகள் நன்றாகக் குணமாகும். மருந்து வேலை செய்யாத சமயத்தில் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் பிரார்த்தனை மூலம் மேற்கண்ட அமைதி மற்றும் ஒளியை நாடுவார்கள்.

224. அக்குபஞ்சர்என்ற சிகிச்சை முறை பலனளிக்கிறதுஎன்பதை வைத்துப் பார்க்கும்பொழுது நம் உடம்பிற்குள் சூட்சுமமாக எனர்ஜி ஓட்டங்கள் இருக்கின்றனஎன்பதும், அந்த ஓட்டங்கள் தடைப்படும்பொழுது உடல்நலக் குறைபாடுகள் வருகின்றனஎன்பதும் புலனாகிறது.

225. மந்திரங்கள் நோயைக் குணப்படுத்துகின்றனஎன்பதை வைத்துப் பார்க்கும் பொழுது, ஆன்மீகசக்தி உடம்பில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்பது புலனாகிறது.

226. வலிஎன்ற உணர்விலிருந்து நாம் நிரந்தரமாக விடுதலைபெற விரும்புகிறோம். ஆனால் நம் உடம்பிற்குக் காயம் ஏற்படுவதை வலிதான் நமக்கு அறிவிக்கிறது. அதன்படி பார்க்கும்பொழுது வலிஎன்ற உணர்வு நமக்குத் தேவையாகிறது.

227. நம்முடைய உடம்பினுடைய இயற்கையான செயல்பாடுகளை நாம் மதித்து நடப்பது நம் ஆயுளை அதிகரிக்கும். இரவில் கண் விழித்து வேலை செய்வது, பல நாள்கள் பட்டினிகிடந்து விரதம் இருப்பது, அளவுக்கு மீறி சாப்பிடுவது போன்றவையெல்லாம் நம் ஆயுளைப் பாதிக்கும்.

228. விழிப்புணர்வு குறைவாக இருப்பவர்கள், கார உணவு அவர்களுக்கு

ஒரு தீவிர சுவையைத் தருவதால் அதையே விரும்பிச் சாப்பிடுகிறார்கள். காரம் ஆயுளைக் குறைக்கும்என்றாலும், இந்தச் சுவையை அவர்கள் நாடுவதால் ஆயுள் குறைவதும் பெரிதாகத் தெரிவதில்லை.

229. சாப்பாடு நம்முடைய ஜீவிய நிலையை எந்தளவிற்குப் பாதிக்கிறதுஎன்பது இன்னமும் முடிவு செய்யப்படாத ஒரு விஷயமாகும். இருந்தாலும், ஆன்மீக நாட்டம் உள்ளவர்கள் சைவ உணவு சாத்வீகமான உணவுஎன்று முடிவு செய்து, அதையே விரும்பிச் சாப்பிடுகின்றனர்.

230. மதுபானங்கள் நம்முடைய மூளையை மந்தமாக்குகின்றன. மூளை மந்தம் ஆகும்பொழுது நம்முடைய கட்டுப்பாடுகள் தளர்ந்துபோகின்றன. அதன் விளைவாக வழக்கமாக அமைதியாக இருப்பவர்கள்கூட மது அருந்திய பின்னர் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

231. போதை மருந்துகள் சூட்சும உலகங்களில் உள்ள சக்திகளுடன் நமக்குத் தொடர்பு ஏற்படுத்துவதால் நம் உடம்பில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. சூட்சுமஉலகத் தொடர்பு ஆரம்பத்தில் இன்பகரமான அனுபவமாக இருந்தாலும், அந்த உலகத்து சக்திகள் நம்முடைய எனர்ஜியை உறிஞ்சிவிடுவதால் நாளடைவில் அந்தத் தொடர்பு நம் உடம்பை பலகீனப்படுத்துகிறது.

232. புகைப்பிடிப்பதும், மது அருந்துவதும் நம் உடல்நலத்திற்குக் கெடுதிஎன்று தெரிந்தும் பலர் இப்பழக்கங்களை மேற்கொண்டுள்ளார்கள்என்பது ஆயுள் மேல் உள்ள அக்கறையைவிட போதை மேல் உள்ள தீவிரம் அதிகம்என்று காட்டுகிறது.

233. ஹிப்னாடிசம்என்ற ஒரு நிகழ்ச்சி நமக்கு ஓர் ஆழ்நிலை பர்சனாலிட்டி இருக்கிறதுஎன்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

234. ஜீவராசிகள் எந்நேரமும் சுற்றுப்புறச்சூழலோடு உறவாடிக்கொண்டு இருக்கின்றன. இந்த உறவாடலில் ஓர் எனர்ஜி பரிமாற்றம் நிகழ்கிறது. உயிரினம் ஆரோக்கியமாக இருக்கிறதென்றால், இந்த எனர்ஜி பரிமாற்றம் உயரினத்திற்குச் சாதகமாக இருக்கிறதுஎன்று அர்த்தம். உயிரினத்தின் ஆரோக்கியம் குறைகிறதென்றால், இந்தப் பரிமாற்றத்தில் உயிரினம் எனர்ஜியை இழக்கிறதுஎன்று அர்த்தம்.

235. சந்தோஷமாக இருப்பவர்களுக்கு எடை கூடுவதும், கவலையால் பீடிக்கப்பட்டவர்களுக்கு எடை குறைவதும் நம் உணர்வுகள் நம் உடல் நிலையை பாதிக்கின்றனஎன்பதை தெளிவாகக் காட்டுகிறது.



236. உடம்பையும், அறிவையும் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்பவர்கள் முதுமையின் விளைவுகள் அவர்கள் உடம்பில் தெரிவதைத் தடுத்து, தம்முடைய இளமையான தோற்றத்தைக் காப்பாற்றிக்கொள்ளலாம்.

237. மருத்துவர்கள் நம் உடம்பில் மாற்று உறுப்புகளைப் பொருத்தும்பொழுது நம்முடைய உடம்பு அதை நிராகரிப்பது நமக்கு வேதனை அளிக்கிறது. தன்னைப் பாதுகாத்துகொள்வதற்கு நம்முடைய உடம்பு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் கற்றுக்கொண்டுள்ளதை இன்று நாம் இடையூறாக நினைப்பதும் சரியில்லை.

238. ‘பிறப்பா, வளர்ப்பா?’ எது முக்கியம்என்ற சர்ச்சைக்கு விஞ்ஞானிகளே முடிவு வைத்துவிட்டார்கள். பிறப்பிலுள்ள குணவிசேஷங்களை வளர்ப்பின் மூலம் பரிமளிக்க வைக்கலாம்என்பதால் பிறப்பு, வளர்ப்புஎன்ற இரண்டுமே சரிசமமானவைஎன்று விஞ்ஞானிகள் இப்போது கருதுகிறார்கள்.

239. நோயாளிக்கும், மருத்துவருக்கும் இடையே ஒரு நல்ல உறவு இருக்கும் பொழுது நோய் விரைவில் குணமடைய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அந்த நல்லுறவைக் கொண்டுவருவது அவ்வளவு சுலபமில்லை.

240. நம்முடைய சூழ்நிலைகள் மாறாமல் ஒன்றுபோல் இருக்கும்பொழுது நிலையான பழக்கவழக்கங்கள் நம் செயல்திறனை அதிகரிக்கும். ஆனால் சூழல் மாறிக்கொண்டே இருக்கும்பொழுது பழக்கவழக்கங்கள் மாற மறுத்தால் அவையே நமக்கு இடையூறாகிவிடும்.

தொடரும்.....

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அன்னை வாழ்வு சைத்தியமையத்தைக் கொண்டு மனிதனின் சக்தியில் ஒரு துளியும் விடுவதில்லை. ஏனெனில் சைத்தியம் எழ முழுசக்தியும் தேவை.

***சைத்தியப் புருஷன் முழு மனிதன்.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(மார்ச் 2008 இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 916) அது போன்ற பத்து வருஷ உழைப்பு அடுத்த பத்து வருஷச் சிந்தனைக்கு ஜீவனைத் தயார் செய்கிறது.

*பத்து வருஷ உழைப்பு பத்து வருஷ சிந்தனையைத் தயார் செய்யும்.*

- சிந்தனை உடலில் எழுகிறதுஎன்று பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார். அதாவது செயலில் சிந்தனை எழுகிறது; செயலால் சிந்திக்க முடிகிறது. இன்றைய உழைப்பு நாளைய யோசனை.
- எண்ணம்என்பது நம்முடையதன்று. உலகில் நடமாடும் எண்ணம் நம்முள்ளே நுழைவதை நாம் நம் எண்ணம் என்கிறோம்.
- நாம் மூச்சுவிடும் காற்று வெளியிலிருந்து உள்ளே சென்று வெளியே வருவதைப்போல் எண்ணம் நம் மனத்தில் நுழைந்து, வாயால் பேச்சாக வெளிவருகிறது.
- உலகத்து எண்ணம் உலகத்துச் செயலில் எழுந்தது.
- மனிதன் நெடுநாளாக வாழ்ந்தான்.
- வாழ்வுஎன்பது உழைப்பு.
- உலகில் மனிதகுலம் உழைத்தது, எண்ணத்திற்கு அடிப்படை.
- அந்த எண்ணங்கள் உலகில் உலவுகின்றன.
- அப்படி உலவும் எண்ணங்கள் லட்சோபலட்சம்.
- நம் மனத்திற்கு இதமான எண்ணம் நம்முள் நுழைகிறது.

**நாம் அதை நம் எண்ணம்எனக் கூறுகிறோம்.**

- பொதுவாக அறிஞர்கள், உலகில் வயதானவர்கள், நெடுநாளாக வாழ்க்கையைக் கவனித்து அனுபவப்பட்டவர்கள், அவர்களில் பலர் ஆரம்பக் காலத்தில் கடுமையாக உழைத்தவர்கள்.



**கடுமையான உழைப்பு,**
**சிறப்பான சீரிய சிந்தனையாக மாறுகிறது.**

- உடல் உழைப்பே சிந்தனைஎன்பது ஏற்க சிரமமான எண்ணம். ஆனால் அதுவே உண்மை.
- இளம் வயதிலேயே சிந்திப்பவர்கள் முற்பிறவிகளில் கடினமாக உழைத்தவர்கள்.
- சிந்தனை மனத்தின் உழைப்புஎன்பதை ஏற்க முடியும்.

  மனத்தில் மேற்பகுதி, கீழ்ப்பகுதி (ஜீவியம், பொருள்) என உண்டு.

  கீழ்ப்பகுதியின் எண்ணம் வலுவானது.

  தன்னைத் தானே பூர்த்தி செய்துகொள்ளக்கூடியது.

  மனத்தில் ஓடும் எண்ணங்கள் திறனற்றவை.

  நிலையான எண்ணங்கள் நம் அபிப்பிராயங்கள்.

  வேரூன்றிய எண்ணங்கள் நம் முடிவுகள், தீர்மானங்கள்.

  உலகத்தின் எண்ணத்திலிருந்து வேறுபட்டவை நம் சொந்த எண்ணங்கள்.

  ஐன்ஸ்டீன் எழுதிய $E = MC^2$ என்பது அவர் உலகுக்கு அளித்தது.

  அது அவருடைய சொந்த எண்ணம் (original idea).

  உலகில் original idea அடிப்படை எண்ணங்கள் 15 அல்லது 20க்கு மேலில்லை.

❀ ❀ ❀

## 917) வாழ்வைப் பற்றிய சிந்தனை முற்றி, அன்னையின் கோட்பாடுகளைச் சிந்திக்க வைக்கிறது.

*சிந்தனை, வாழ்வைக் கடந்து அன்னையைத் தொடரும்.*

- சிறு குழந்தை சில சொற்களை முதலில் பேசும்முன் இலட்சக்கணக்கான முறை அச்சொற்களைக் காதால் கேட்கிறது.

  ஒரு சொல் எழ ஓராயிரம் முறை கேட்க வேண்டும்.
- 300 ஆண்டுகளாக ஆங்கிலேயர் அனுபவத்தை நாம் அனுதினமும் பார்த்தும், அவர்கள்போல் முழுமையாக வாழ முடியவில்லை.

- மூன்று தலைமுறை கடனில் அழிந்தபின் நாலாம் தலைமுறை 'இனி கடன்என வாங்கக்கூடாது' என முடிவு செய்கிறது.
- 10,000 ஆண்டு விவசாயம் செய்த அனுபவம் (industry) தொழிலை நிர்வாகம் செய்யப் பயன்படுகிறது.
- வாழ்வுஎன்பது தரைமட்டம். உணவு, உடை, உறைவிடம், அன்னை வாழ்வுஎன்பது மேல்உலகைக் கடந்த கட்டம். ஆத்ம நிறைவு, அன்பின் நெகிழ்வு, ஒருவர் சிறப்பு உலகை உய்விப்பது, உலகை உள்ளே காண்பது, அவ்வுலகினுள் பிரம்மத்தைக் காண்பது.

  அன்னைக் கோட்பாடுகள் அன்னை வாழ்வைத் தரும்.

  சாப்பாடு, துணி, வீடு பற்றிய சிந்தனை வாழ உதவும்.

  உணவும், உடையும், உறைவிடமும் அடிக்கல்.

  அஸ்திவாரம் பலமான பின்னரே ஆகாயத்தில் பறக்கலாம்.

  உலக உற்பத்தியில் பிரிட்டன் முதன்மையாக இருந்து 7% உற்பத்தி செய்தபொழுது அமெரிக்கா 34% உற்பத்தி செய்தது; அது 1900த்தில். ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜில் படித்தவர்கள் 1930, 1940வாக்கில் அமெரிக்காவைப் பற்றிக் கேள்விப்படவில்லை. முதன்மையான நாட்டைப் போல் 5 மடங்கு உற்பத்தி செய்து, 50 மடங்கு செல்வம் பெற்றிருந்த பொழுதும், அமெரிக்காவைச் சீண்டுபவர் எவருமிலர்.

  உலகப்போரை வென்று, மற்ற நாடுகளுக்குப் போரை வெல்ல உதவி செய்து, அவர்கள் பட்ட நஷ்டத்தை மீண்டும் ஈடு செய்ய உதவிய பின்னரே உலகம் அமெரிக்காவைப் பற்றிக் கேள்விப்பட்டது.

  - செல்வத்திற்குச் செல்வாக்குண்டு.
  - ஆனால் செல்வம் பதவியால் முதிர்ந்தபின்னரே அது எழும்.
  - **வாழ்வின்சிந்தனை முதிர்ந்தால் அன்னைச் சிந்தனை எழும்.**
  - சிந்தனை செயலைவிட உயர்ந்தது.
  - செயல் சிந்தனையைவிட வலுவானது.
  - செயலுக்குச் சிந்தனை இல்லை.
  - சிந்தனைக்குச் செயல் உண்டு.
  - சிந்தனை செயல்பட பூரணம் தேவை.
  - வாழ்வும், அன்னையும் எதிர் துருவங்கள்.



  - வாழ்வில் ஆரம்பித்து, அன்னையில் முடிக்க வேண்டும்.
  - வாழ்வின் சிந்தனை அன்னையைச் சித்திக்க வைக்கும்.
  - உள்ளது பூர்த்தியானால், உயர்ந்ததுவந்து பூரணம் பெறும்.
  - சிந்தனை சிறந்த செயலெனப்படும்.

❀❀❀

**918) இலட்சியப் போராட்டங்கள், கடின உழைப்பு, சீரிய சிந்தனை, உள்ளத்தின் உருவங்கள் முடிந்தபின் சிந்திக்காமல் விளங்கும். உணர்வெழாமல் இன்பம் ஊறும். அசையாமல் சாதிக்கலாம்.**

*மூலம் முழுமையானது.*

- ஸ்தாபனத்தில் ஆரம்பநிலை அடிமட்டத்தில் சேருபவன் இலட்சிய மனப்பான்மையுடன் வருகிறான். வெகுசீக்கிரம் அவனுக்கு எதிரி வெளியேயில்லை, ஸ்தாபனமே எதிரிஎனத் தெளிவு பெறுகிறது. இலட்சியம், போராட்டம் புறத்திலில்லை; அகத்துள் உள்ளதுஎன்று புரிய பல ஆண்டுகளாகும். அகப்போராட்டம் அனைவரும் ஏற்கக்கூடியது இல்லை. அது புறப்போராட்டமாகும். அவன் ஸ்தாபனத்தின் பகுதி ஆவான். போராட்டம் உள்ளேஎன்று புரிந்து, அதை ஏற்றவன் வெற்றி பெற்றால், அவன் ஸ்தாபனத் தலைமைக்கு வருவான்.
- கடின உழைப்பு, உடல் உழைப்பாகும். ஸ்தாபனத்தில் 8 அல்லது 10 நிலைகள் இருக்கும். இலட்சியவாதியை ஸ்தாபனம் வெளியே தள்ள முயலும். இந்த நிலையில் அவன் இலட்சியம் வெளிப்பட அதிக உழைப்பு தேவை. அவன் இலட்சியம் செயலில் வெளிப்படாவிட்டால், அவனும் ஸ்தாபனத்தின் பகுதியாவான். ஸ்தாபன அவல நிலையை மீறி தன் வேலையை இலட்சியமாகச் செய்ய, உழைப்பு கடினமாகும். அதில் வெற்றி பெற்றால், மனப்போராட்டத்தில் அக்கடினம் எழும்.

அல்பமானவன் இலட்சியவாதியை அல்பம் என்பான். 8 வருஷமாகக் கட்டிய கோட்டை அன்று எழும் எரிச்சலில் அழியும். எலும்பே இல்லாதவன் இலட்சியப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்துபவனை 'முதுகெலும்பில்லை' என்பான். அப்படி அவன் அந்த

சொல்லைச் சொல்லும்பொழுது அவலமாக அவனுடைய சொந்த அசிங்கத்திற்கு அல்ப நன்கொடை கேட்டுக்கொண்டிருப்பான். அவனை எதிர்த்துப் பேசினால், அனைவரும் அவனை ஆதரித்துப் பேசுவர். ஸ்தாபனம் 'குப்பை' மனிதரால் ஆனது. அட்டைபோல் ஸ்தாபனத்தை உறிஞ்சும் நாதியற்றவர்கள் நிறைந்தது ஸ்தாபனம். இதுவே சமூகத்தின் அங்கம். 'இதை எதிர்க்கக்கூடாது; எதிர்ப்பது பலன் தாராது'என்று புரிய சிந்தனை சீரிய சிந்தனையாக மாறவேண்டும்.

- ➢ **இலட்சியத்திற்கு மனதால், செயலால் சேவை செய்யலாம். அதைத் தனி மனிதனுக்கோ, ஸ்தாபனத்திற்கோ செய்ய முடியாதுஎன விளங்கும்.**
- ➢ சேவை தெய்வத்திற்கு, தனி மனிதனுக்கில்லைஎனப் புரியும்.
- ➢ உணர்வைக் கடந்த இன்பம் உணர்வெழாமல் ஊறும்.
- ➢ அது அகத்திண்மை, ஆன்மபலன்.
- ➢ ஆன்மபலன் அசையாமல் சாதிக்கும்.

இலட்சியமாகப் போராடியபின்னரே, 'போராட்டம் பலன் தாராது' எனப் புரியும். 'கடினமாக உழைத்தவனுக்கே பலன்; உழைப்புக்கில்லை' என விளங்கும். மௌனமாகச் செயல்பட 'உள்ளே' போக வேண்டும். அது 'வெளியே' பலன் தரும். உடனுறைபவர்க்குப் பலன் வரவேண்டும் என்றால், அவரனைவரும் ஒன்று சேர்ந்து இலட்சியவாதியை அவலட்சணமாக்குவர்.

- ➢ சேவை மூலவனுக்கு.
- ➢ முழுமை மூலவனுக்குச் சேவை செய்யும்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

**ஜீவிய மணி**

**ஆழ்ந்த மௌனம் ஆன்மாவுக்குரியது.**





**P.85 The leaden grip of Matter it can break.**

**ஜடத்தின் உடும்புப் பிடியைத் தகர்க்கும் அடி.**

- ✡ **காலனின் கோபக் கனலைக் கடுமையாக உதாசீனம் செய்தாள்.**
- ✡ **க்ஷணத்தின் செயல் யுகத்தின் சிருஷ்டியாகும்.**
- ✡ **எண்ணத்தின் எழுச்சி முடித்த முடிச்சு.**
- ✡ **லேசான சொல் பாராமுகமாக எழுப்பிய பாரம்.**
- ✡ **ஊமையாக உருண்டு திரண்ட சக்தி கட்டவிழ்ந்த நிலை.**
- ✡ **புதிரான சமாதிக் குகையின் உட்புறம்.**
- ✡ **உடலின் உறக்கம் கைக்குத் தரும் வலிமை.**
- ✡ **மூச்சு நின்றது. இதயத் துடிப்பும் நின்றது.**
- ✡ **காணாததைக் கண்டு, நடக்காததை நடத்தியது.**
- ✡ **பேசாத எண்ணம் பாதையின்றிப் போய்ச் சேர்ந்தது.**
- ✡ **மௌன உறுதி நிகழ்ச்சிகளை மௌனமாக நடத்தியது.**
- ✡ **கை, கால் அசையாமல் காத தூரத்தில் செயல்படும்.**
- ✡ **மலை போன்ற அஞ்ஞானம், இக்குட்டையான வாழ்வு.**
- ✡ **தீர்க்கதரிசனம் ஒளிப் பிழம்பாய் பிரகாசிக்கும்.**
- ✡ **மதுவின் ஆட்டமும் ரௌத்தாக்கினியும்.**
- ✡ **உடலினுள் தேவதை எழுந்து உலுக்கினாள்.**
- ✡ **சர்வ ஞானமும், சர்வ வல்லமையும் உள் நுழைந்தன.**
- ✡ **மறைந்துள்ள மலைபோன்ற மகேசனின் சக்தி எழுந்தது.**
- ✡ **ஒளிமயமான சக்ரவர்த்தியாய்த் தன்னுலகில் வீற்றிருந்தது.**
- ✡ **இக்கடுமையான லோகத்திற்கும் மனம் அரசாள வரும்.**

- ✡ **எண்ணமெனும் தெய்வீக தர்க்கம்.**
- ✡ **மாறும் நேரத்தில் தாவும் அசைவு.**
- ✡ **சிருஷ்டியின் ஆச்சரியம் வரவில்லை.**
- ✡ **ஜடத்தின் கண்மூடிச் செயலின் திறமை.**
- ✡ **அனைத்தும் அதிசயம்; அதிசயத்தால் மாறும்.**
- ✡ **இரகஸ்ய இயற்கையின் வலிமைமிக்க எல்லை.**
- ✡ **ஜடமழிந்த பெருவெளியின் ஓரத்தில்,**
- ✡ **கட்டுக்கடங்காத பெருமை நிறை சக்தியின் சாம்ராஜ்யம்.**
- ✡ **அங்கு மனம் வாழ்வின் ரூபங்களை வரைகின்றது.**
- ✡ **ஆத்மா தன் எண்ணங்களை அதன் சக்தியால் பூர்த்தி செய்கிறது.**
- ✡ **மலை போன்ற சொற்கள் மகிமையான பார்வை தரும் நிஷ்டை.**
- ✡ **பிரிந்த லோகங்களின் தெரியாத தொடர்பு,**
- ✡ **அவள் சட்டத்தை ஏற்கும் கற்றுக்குட்டி.**
- ✡ **புதிரான அவள் உலகின் பெரும் ஜோதியைக் கொணர்வாள்.**
- ✡ **அவன் நிற்கும் இடம் இது. மாய்ந்த உலகில் அவனடிகள்.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

கெட்டது என்பது நல்லதால் வெளிப்படுத்த முடியாத முழுமையின் மற்றொரு பகுதியை வெளிப்படுத்துவது என்ற யோகக் கருத்தை சமூகம் அறிந்ததால், இந்த நூற்றாண்டில் சமூக முன்னேற்றம் வளர்ந்தது.

***கெட்டதை நல்லதாகக் கொண்டதால் உலகம் முன்னேறுகிறது.***



# ஆன்மாவை அழைத்தல்

**N.** அசோகன்

நாம் ஆன்மாவை அழைக்கும்போது, அது அற்புதம் விளைவிக்கும் வகையில் செயல்படுகிறது. அது எப்படி சாத்தியமாகிறது? மரபு வழி பார்க்கும்பொழுது இதற்குப் பல வழிகளிருக்கின்றன. மந்திரத்தை ஜபிப்பது மிகவும் பரவலாகத் தெரிந்த ஒரு முறையாகும். மந்திரங்களை அவற்றிற்குரிய முறையோடு உச்சரிக்கும்பொழுது, அவை மிகவும் சக்தி வாய்ந்ததாகச் செயல்படுகின்றன. இருப்பதிலேயே மிகவும் சக்தி வாய்ந்த மந்திரம் 'ஓம்' என்பதாகும். இம்மந்திரத்திற்கு 'சப்த பிரம்மம்' என்று பெயர். மாற்றமில்லாத ஆன்மா படைப்பிற்குள் வரும்போது மாற்றமுள்ளதாக மாறுகிறது. இம்மாற்றம் மூன்று கட்டங்களாக நிகழ்கிறது. மூன்றாம் கட்டம் துவங்கும்போதுதான் 'ஓம்' என்ற சப்தம் பிறக்கிறது. இந்த 'ஓம்' மந்திரத்தை உச்சரிப்பதிலேயே அந்தந்த ஆன்மீகப் பிரிவிற்கேற்றபடி வித்தியாசங்கள் உள்ளன. ஒரு வகுப்பினர் 'ஓம்' மந்திரத்தை ஒன்றரை கோடித் தடவைகள் உச்சரிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். அதற்குரிய பவித்திரத்துடன் உச்சரிக்கும் போது 'ஓம்' மந்திரமானது தெய்வங்கள் உறையும் உலகத்திற்கு மேலே உள்ள அகண்ட பிரம்மத்தையே (cosmic consciousness) நமக்குக் காட்டுகிறது.

நான் தற்பொழுது எழுதுவது நேர்மையாக வாழக்கூடிய குடும்பஸ்தர்கள் அளவில்லாத செல்வம் பெறுவதைப் பற்றியதாகும். செல்வ வளம்என்பது வாய்ப்புகளிலிருந்து உண்டாவது. ஆனால் மனிதனோ பிரச்சினைகளில் சிக்கிக்கொண்டிருக்கிறான்.

'எந்த மந்திரத்தையும் என்னை லட்சக்கணக்கான தடவைகள் சொல்லும்படிக் கேட்காதீர்கள். அது என்னால் முடியாது. ஓர் அலுவலகத்தில் வேலை செய்யும் சாதாரண மனிதன் நான். ஆனால்

நான் உண்மையாகச் செயல்படுகிறேன். என்னை வாட்டியெடுக்கும் பிரச்சினைகளிலிருந்து விடுதலை கொடுக்கும் அளவிற்கு ஆன்மாவை என் வாழ்க்கையில் செயல்பட வைப்பதற்கு ஏதேனும் வழியிருந்தால் சொல்லுங்கள்' என்று பலர் சொல்கிறார்கள். பிரச்சினை நம் மனதில் கவலையூட்டும் எண்ணமாக வருகிறது. எண்ணம் மனதிலிருந்தால், மனதிற்குப் பின்னால் ஆன்மா இருக்கிறது. பிரச்சினை பற்றிய சிந்தனையில் நாம் மூழ்க மறுத்தால், நாம் அறிவைக் கடந்து ஆன்மாவிற்குச் சென்றுவிடுவோம்.

வாழ்க்கையில் முன்னேறிக்கொண்டிருந்த ஒரு குடும்பத்தில் ஓர் உறுப்பினர் மட்டும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, கண்ட இடங்களில் விழுந்து கிடப்பதைப் பழக்கமாகக்கொண்டிருந்தார். இவருடைய சகோதரர் இப்பிரச்சினை பற்றிய எண்ணங்களையே தம் மனதிற்குள் நுழையவிடாமல் தடுக்கும் முயற்சியை மேற்கொண்டார். தொடக்கத்தில் கடினமாக இருந்தாலும், விடாமுயற்சியுடன் தொடர்ந்ததால் நான்காம் நாள் வெற்றி கண்டார். குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர் உறுப்பினராகவிருந்த விளையாட்டுச் சங்கம்தான் (sports club) இந்தக் கெட்டப் பழக்கத்திற்குத் துணையாக இருந்தது. அச்சங்கத்தில் உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு எழுந்து, இரண்டு கட்சிகளாகப் பிரிந்து, குடிப் பழக்கத்திற்கு அடிமையானவர் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டார். இந்த நீக்கம் அவர் குடிப் பழக்கத்தில் இருந்து விடுபட்டு, தன் குடும்பம் நடத்தி வந்த ஒரு தொழிலைத் தாம் பார்த்துக்கொள்ள முன்வர உதவியது.

பிரச்சினைகள் எழும்போது மக்கள் தமக்குத் தெரிந்த தீர்வுகளை மேற்கொள்ள முயல்கின்றனர். இத்தீர்வுகள் பலிக்காதபோது பிரார்த்தனையை மேற்கொள்கின்றனர். பிரார்த்தனையும் பலிக்காத பொழுது கர்மபலன் என்பது உறுதியாகிறது. இதன்பின் ஜாதகம் பார்க்கின்றனர். ஜாதகம் கர்மபலனை உறுதிபடுத்தும்பொழுது, நம் முயற்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. இக்கட்டத்தில்தான் மனிதனுக்கு ஓர் உயர்ந்த ஆன்மீக முயற்சி எடுக்க வேண்டிய சந்தர்ப்பம் வருகிறது. அவனுடைய எல்லா முயற்சிகளும் தோற்றுப் போய்விட்டால், கடைசிக் கட்டமாக ஆன்மா செயல்பட முன்வருகிறது.



இத்தருணத்தில் கர்மத்தால் கட்டுண்டிருப்பதா அல்லது ஆன்மாவைச் செயல்படச் சொல்வதாஎன்ற இக்கட்டு மனிதனுக்கு எழுகிறது. சரியாக முடிவெடுக்க மனிதன் முன்வருவானா?

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

குரு தன்னைப் பயன்படுத்துவதே சிஷ்யனுக்குப் பரிசு. அவனது தனி உரிமை, குரு அவனைத் தவறாகப் பயன்படுத்துவது; அவனுக்குத் தவறு செய்து தூர எறிவதே ஆகும்.

***குருவின் அலட்சியம் சிஷ்யனுக்கு வரப்பிரசாதம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆன்மீகக் கட்டுப்பாடெனும் தவம் பல்வேறு காரணங்களுக்காக ஒருவருடைய ஜீவியத்தை அளவு கடந்து உயர்த்துகிறது. அவ்வுயரத்தில் உடலால் உழைப்பவருடைய அறிவும், திறனும் இயல்பாக அதன் பாகமாக அமைகிறது. சில சமயங்களில் இவ்வுயர்வின் சாரம் கீழே வந்து அவர் உடலின் ஜீவியத்தைத் தொடும். தொட்டபின், அவர் செயல்களுக்கும், சொற்களுக்கும், பார்வைக்கும் அத்திறன் உண்டு. அவர் பார்வை படும் இடத்தில் வாழ்வு நிறையும்.

***பக்குவமான மனிதனின் பவித்திரமான பார்வையால் வாழ்வு நிறையும்.***

## தெய்வீக மனம் - மனித மனம்.

- நாம் மனம்என்பது மேல்மனம். அதை மனிதமனம் என்கிறோம்.
  - உடலை அதிகமாகக் கவனித்தால், அது நோய்வாய்ப்படும்.
  - உணர்ச்சியில் ஊறினால் கவலையுள் சிக்குவோம்.
  - 'மனம் முக்கியமானால், பயித்தியம் பிடிக்கும்' என அன்னை கூறுகிறார்.
- நாம் மனத்தைப் பற்றிப் பல வகைகளாகக் கேள்விப்படுகிறோம்.
  - நண்பரை சிங்கப்பூர் வரச் சொல்லி அழைக்கப் போனால், அவரே நம்மை சிங்கப்பூருக்கு அழைக்கிறார் - நம் மனத்திலுள்ளது அவருக்குத் தெரிகிறது.
  - 'என் தாயார் யார்?' என கர்ணன் மனம் அரித்துக்கொண்டிருந்த பொழுது, கிருஷ்ணனைக் கர்ணன் கேட்கிறான். குந்திபுத்திரன் என அறிகிறான். அதன்பின் துரோணரைக் காணப் போகும்பொழுது, ''வா, குந்திபுத்திரா'' என அழைக்கிறார் - துரோணருக்குக் கர்ணன் குந்திபுத்திரன்எனத் தெரியும். அவன் அறிந்த பின்னரே அதை வெளியிட்டார்.
  - பம்பாயில் உள்ள பெண் தம் சொந்த ஊரில் விமானம் பற்றி எரிந்து விழுந்ததை அறிந்து பேசுகிறார். ரேடியோ, நியூயார்க் ஏர்ப்போர்ட்டில் அது நடந்ததை ஊர்ஜிதம் செய்கிறது.
  - உடலுக்குப்பின் யோகி போனால், தூரத்திலுள்ள பொருளையோ, மனிதனையோ அசைக்க முடியும்எனப் பகவான் கூறுகிறார்.
  - கல்லூரிப் படிப்பை மேற்கொள்ள முடியாதவர் மனம் புழுங்கும் நேரம், பேப்பரில் 'பல்கலைக்கழக நூற்றாண்டை முன்னிட்டு இனி மாணவர்கள் தபால் மூலம் பட்டம் பெறலாம்' எனச் செய்தி வருகிறது.
  - எதிரியைச் சுட்டுக் கொல்ல மனம் துடித்தால், கனவில் எதிரி நம்மைச் சுட்டதாகத் தெரிகிறது.
  - கேட்க உரிமையற்றதைக் கேட்க மறுத்தால், வலிய அதை நமக்குக் கொடுக்கிறார்கள்.
  - அநியாயமாகத் தண்டனை வரும்பொழுது தண்டனையை ஏற்றால், தண்டனையை அளித்தவருக்குப் பெருந்தண்டனை வருகிறது.



உடலுக்கும், உயிருக்கும் மனம் உண்டு. மனத்தைக் கடந்து முனிவர், ரிஷி, யோகி, தெய்வத்திற்கும் மனம் உண்டு. இவை நேராகவும், தலைகீழாகவும், கோணலாகவும், சங்கேதமாகவும், அரைகுறையாகவும், அற்புதமாகவும் செயல்படும் நேரம் உண்டு. சூட்சுமமாக வாழ்வைக் கவனித்தால், அவை மேற்கூறியவாறு சில சமயங்களில் புரியும். மனம் பெரிய லோகம். நாம் அதன் மையத்தில் வாழ்கிறோம்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சைத்தியம் முன் வந்தால் ஒவ்வொரு கணமும் நிறைவாகும்.

***சைத்தியப் புருஷனுக்கு நிறைவு மட்டுமேயுண்டு.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அன்னையின் ஸ்பர்சத்தை ஜீவனில் அனுபவித்தவனால் வேறெதையும் அனுபவிக்க முடியாது.

***அன்னை தீண்டிய ஜீவனுக்கு அடுத்தது இல்லை.***

# முன்னேற்றம் தரக்கூடிய சாதனை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N.** அசோகன்

## AMBITION - ஆர்வம் :

வாழ்வில் சாதிப்பதற்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்று - ஆர்வம். ஆர்வம் இல்லாதவனால் எதையும் சாதிக்க முடியாது. மனிதனுக்கு அந்த urge அவசியம். ஆர்வம் தீர்மானம் தரும். தீர்மானம் வலுவானால், அதினின்று எழும் சக்தி அதிகமாகும். அந்தச் சக்தியைப் பலன் தரும் சக்தியாக மாற்றும்பொழுது மிகப்பெரிய பலனும் பல நிலைகளில் வரும். அது நம் திறமையை மட்டும் பொருத்ததில்லை; முக்கியமாக நம் ஆர்வத்தின் தீவிரத்தைப் பொருத்தது. மேலை நாடுகள் (Western countries) கீழைநாடுகளைவிட (Eastern countries like India) பொருளாதார ரீதியிலே மிகவும் உயர்ந்து உள்ளன. அதற்கு ஒரு முக்கியமான காரணம் அவர்களுடைய ambitionதான். நம் நாட்டிலே நாம் பேசிப் பேசியேப் பொழுதினை விரயம் செய்கின்றோம். Time is money என்ற தத்துவமே நமக்குப் புதியதாக இருக்கின்றது. முக்கியமாக punctuality, speed என்பது நம்மிடையே மிகவும் அரிதாகக் காணப்படுகிறது. மேலைநாடுகளை எடுத்துக்கொண்டால், அவர்கள் வேலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். அதனால்தான் அங்குப் பொருள்வளம் அதிகரித்து உள்ளது. பகவான் ஸ்ரீ அரவிந்தர், மேலைநாட்டவர் ஜடத்தில் ஆன்மாவைக் கண்டவர்கள்என்று கூறியிருக்கிறார்கள்.

நம் நாட்டில், பழங்காலத்தில் ஆர்வத்திற்கும், பேராசைக்கும் பாகுபாடு தெரியாமல் ஒரு குழப்பமான நிலையை ஏற்படுத்தி உள்ளனர். ஒருவன் வாழ்க்கையில் அதிகம் சம்பாதிக்க வேண்டும், பொருள் ஈட்ட வேண்டும்என்று பேசினால், அவனை ஒரு பேராசைக்காரன்என்று பட்டம் கட்டிவிடுவார்கள். இது நாளாவட்டத்தில் மாறி, ஓர் ஆர்வமில்லாத மந்த நிலையை - இருப்பது போதும்; அதிக ஆசை, அதிக நஷ்டம், உள்ளதும் போச்சு நொள்ளைக்கண்ணா; என்ற கருத்தை - வலுப்படுத்தி, மக்களைச் சோம்பேறிகள் ஆக்கிவிட்டது. பேராசை - greed - என்பது தன் தகுதிக்கு அதிகமான விஷயத்திற்காக ஏங்குவது, முயற்சி இல்லாமல் கிடைக்க வேண்டுமென்று நினைப்பது, குறைந்த வேலைக்கு அதிக வருமானம் எதிர்பார்ப்பது போன்றதாகும். சாதாரணமாகப் பேராசை உள்ளவன் குறுக்கு வழியில் அதிகம் சம்பாதிக்க நினைப்பவன். இங்கு நாம் எடுத்துக்கொண்டது இப்படிப்பட்டவர்கள் அல்லர்.



வாழ்வில் சாதிக்க வேண்டும். அதற்கான முழு முயற்சியையும், கடின உழைப்பையும் தருவதற்குத் தயாராக உள்ளவர்களைப் பற்றி மட்டும்தான் இங்கு கருதுகிறோம். நாம் நம்முடைய ஆர்வத்தையும், முயற்சியையும் தீவிரப்படுத்தும்பொழுது நம்மிடையே ஒரு சக்தி பிறந்து, அந்த சக்தி தடைகளை விலக்கி, உடைத்து முன்னேறுவதற்குச் சாதகமான சூழலை உற்பத்தி செய்வதை நாம் காண முடியும். உதாரணமாக, ஒருவனுக்குப் பணம் அவசியம் தேவை என்றால், ஆர்வமுள்ளவன் ‘கையில் இல்லையே, தகப்பனார் சேர்த்து வைக்கவில்லையே, மாமனார் கொடுக்கும் நிலையில் இல்லையே (dowry call) - என்றெல்லாம் யோசிக்காமல், பணம் கிடைக்கக்கூடிய மற்ற வழிகளை ஆராய்ந்து, அது கிடைப்பதற்கான முயற்சியை எடுப்பான். அவ்வாறு செய்யும்பொழுது அவனுக்குத் தேவையான பணம் அவனைத் தேடி வருவதைக் காண முடியும். பணத்திற்கு எதுவோ, அதுவேதான் marketற்கும் - new product, new market, new idea (advertisement, training, etc.).

ஆன்மீகத்தில் ambition என்பதை aspiration என்று குறிப்பிடுகின்றார்கள். Ambitionஓ, aspirationஓ, எதுவாக இருந்தாலும் தீவிரமான ஆர்வமில்லாமல் எந்த ஒரு துறையிலும் - ஆன்மீகமானாலும் சரி, வாழ்வானாலும் சரி - சாதிக்க முடியாது. பூரண யோகம்என்பது ஒரு கடினமான உயர்ந்த பாதை. பகவான் ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னையினுடைய அவதார நோக்கமே பூரண யோகத்தின் மூலமாகச் சத்தியஜீவிய சக்தியை இந்தப் புவிக்கு

கொண்டுவந்து, மரணமிலா தெய்வீகவாழ்வை ஏற்படுத்துவதாகும். அவர்களுடைய பூரண யோகத்தை நாம் கடைப்பிடிக்காவிட்டாலும், அவர்கள் கொடுக்கின்ற ஆன்மீகப் பலனைக் குறைந்தபட்சமாக நம் வாழ்வில் பெற்று, இந்தப் பூலோக வாழ்க்கையைச் சொர்க்கமாக மாற்ற வேண்டும்என்றால் நம்முடைய தாழ்ந்த குணங்களையும், ஆசை, அபிலாஷைகளையும் அன்னை மீது உயர்ந்த ஆர்வமாக மாற்ற வேண்டும். அன்னையின் அருள் நம்மை நம்முடைய துன்பங்களில் இருந்து விடுவித்தாலும், நாம் வாழ்வில் அதிர்ஷ்டத்தைப் பெற வேண்டும்என்றால் நம்முடைய குறைகளை விலக்கி, அன்னைக்கு உகந்தவர்களாக மாறவேண்டும். அன்னையிடமிருந்து ஆன்மீக அதிர்ஷ்டத்தைப் (spiritual progress) பெறவேண்டும்என்றால், அதற்கு நாம் ஒரு சாதகராக மாறவேண்டும். சாதாரண நிலைக்கு உள்ள சட்டங்கள், நிபந்தனைகள் சாதகர்களுக்குப் பயன்படாது. அன்னை கடும் நிபந்தனைகளை (self-discipline) எதிர்பார்க்கின்-றார்கள். இங்கு எல்லோரையும் சாதகர்களாக மாற வேண்டும்என்று ஸ்ரீ கர்மயோகி அவர்கள் கூறவில்லை. அன்னை தரும் அதிர்ஷ்-டத்தைப் பெறக்கூடியவர்களாக உங்களைத் தயார்செய்து கொள்ளுங்கள்என்று கூறுகிறார்.

*தொடரும்....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

கடந்த கால உழைப்பு இன்றைய நிலையை நமக்கு அளித்துள்ளதற்கு நாம் நன்றியறிதலுள்ளவர்களாக இருப்பதில்லை. உண்மை அதுவாக, நாம் எப்படிப் பிறரை நன்றியறிதலுள்ளவரில்லைஎனக் குறை கூற முடியும்?

***கடந்ததை நினைத்து நெகிழ்வது நன்றியறிதல்.***





# மலரும் மணமும்

*(நவம்பர் 2007 இதழின் தொடர்ச்சி....)*

மகேஸ்வரி

"அக்கா, இன்று அரசைப் பார்த்தேன்".

"எந்த அரசு, மல்லிகை?" என்று கேட்டாள் முல்லை.

"முல்லையக்கா, ஒரு பழமொழி தெரியுமல்லவா? 'தூங்குபவர்-களை எழுப்பிவிடலாம். ஆனால் தூங்குபவர்களைப்போல் நடிப்பவர்-களை எழுப்ப எந்தவொரு வழியும் இல்லை', தெரியுமா? எனக்கு, உனக்கு தெரிந்த ஒரே ஒரு அரசு, தென்னரசு. இப்பொழுது நினைவிற்கு வருகிறதா?"

'மறந்தால்தானே நினைவுக்கு கொண்டு வர' என்ற மனதின் குரலை மறக்கடித்த முல்லை, "ரோஜாக்கா வீட்டு அன்னை தியானத்திற்கு நேரமாகவில்லையா? வா, நானும் உன்கூட வருகிறேன்" என்று சம்பந்தமில்லாமல் பேசினாள்.

"அக்கா, இன்றைக்கு நீ தியானம் செய்ய இயலாது. உன் வயிற்றில் பட்டாம்பூச்சி பறக்கிறது. இந்த நிலையில், வேண்டுமானால் 'Peace Mother' என calling (அழைப்பு) செய்யலாம். இல்லை, past consecration செய்ய முடிந்தால், என்னுடன் தைரியமாகப் பேசக்கூட முடியும். நீயாக முகத்தை மூடிக்கொண்டால், அதை என்னால் விலக்கிவிட முடியும். கழற்ற முடியாத கவசத்தை மாட்டிக் கொண்டால், அதைத் திறப்பதற்கு ஒரே வழி அன்னைதான். ஆனால், அதையும் நீயே விரும்பி கேட்டாலொழிய, அவர்களும் செய்ய மாட்டார்கள், தெரியுமல்லவா?"

"இன்றைக்கு நீயென்ன 'தெரியுமா?, தெரியுமல்லவா?' என்ற இரு வார்த்தைகளை வைத்துப் பேசப்போவதாக யாரிடமாவது சொல்லி இருக்கின்றாயா? ஏதாவது போட்டியில் கலந்துகொள்வதற்கு ஒத்திகையா?"

"வா, வா போகலாம்".

தியானத்திற்கு உட்கார்ந்த முல்லையின் மனது அவள் வசம் இல்லை. தாயின் மடியிலிருந்து நழுவி ஓடும் இரண்டு வயது குழந்தையைப்போல் ஓரிடத்தில் இல்லாமல், 'புதியதாக நடக்கக் கிடைத்த சுதந்திரத்தை இன்றைக்கே முழுவதும் அனுபவித்துத் தீர்த்துவிட வேண்டும்' என்பதைப் போல் தாவித் தாவி சென்றுகொண்டே இருந்தது. 'அன்னையின் நினைவு வேண்டும். அன்னையின் நினைவு மட்டுமே வேண்டும்' என்று பிடித்து நிறுத்தி, ஒரு பத்து தடவைகள் சொல்ல ஆரம்பித்தால், பதினொரு தடவை பசுவின் மடியைத் தேடி ஓடும் கன்றுக்குட்டியைப்போல் அவளையும் அறியாமல் எங்கே ஓடியது. அன்னையின் நினைவு எல்லாவற்றையும் விடச் சிறந்ததுஎன்று சொன்னாலும்கூட, அதற்கும் கீழே ஒரு மனது எதையெதையோ நினைத்தது. எதையும் நினைக்கக்கூடாது, Mother, Mother என்று விடாமல் சொல்ல முயன்ற முல்லை, சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் குழந்தை தெருவில் மேள சத்தத்தைக் கேட்டவுடன், வாயில் வைத்ததைக்கூட விழுங்காமல் உப்பிய முகத்துடன், என்னவென்று அறியும் ஆவலுடன் ஓடுவதைப்போன்று மனது கூப்பிட்டுக்கொண்டு இருப்பதை விடாமல், ஆனால் அதே சமயத்தில் அதனுடன் ஒட்டாமல், குடுகுடுவென்று வேறு எதையோ பிடிக்க ஓடியது. சடுகுடு ஆட்டத்தில் போராடி களைத்தவர்கள் ஓரிடத்தில் நின்று மூச்சு வாங்குவதைப் போன்று முல்லையின் மனதும் அரசில் - தென்னரசுவில் - மூச்சு விட்டுக்கொண்டிருந்தது. எத்தனை வருடங்கள்? ஆனால் மனதுக்கு மட்டும் வருடங்களை ஒரு நொடியில் கணக்கில்லாமல் முன்னேயும், பின்னேயும் போகச் செய்யும் காலச் சக்கரத் தன்மை கொண்டதல்லவா? அது நினைத்தால், காலத்தை நிறுத்தும், வேகமாக ஓடச் செய்யும். அது விளையாடும் விளையாட்டிற்கு அளவேயில்லை. எல்லோருமே அடிமைகளாக இருக்கின்றோம். மனதுடன் சேர்ந்து கொண்டாட முல்லைக்கு முடியவில்லை. மூச்சை இழுத்துவிட்டு, அதன் போக்கில் விட்டுவிட்டாள். களைத்துச் சலித்துகொண்டே மனது ஒரு நிலையில் நின்றது. அதே சமயத்தில் முல்லையும் Peace Mother என தொடர்ந்து அழைக்க ஆரம்பித்தாள். ஒரு மணி நேரம் பறந்து சென்றது.

தியானம் முடிந்தவுடன் வயிற்றுக்கு என்றுமே அன்னை பிரசாதம்



வழக்கமாக ரோஜாவின் வீட்டிலுண்டு. சாப்பிடும்பொழுது பிரசாதத்திற்கு உரிய மரியாதையுடன், பயபக்தியுடன் இருந்தாலும் முல்லையின் மனது மீண்டும் முன்னே, பின்னே ஓடியது. மல்லிகைக்கு எதை எப்பொழுது சொல்ல வேண்டுமென்று தெரியாது. தியானத்திற்குப் பின்னால் சொல்லியிருக்கக்கூடாதாஎன்று மல்லிகையின் மீது குற்றம்சாட்டியது. இவன் எப்படி அவள் கண்ணில் பட்டான்? இனியொரு தடவை மூடிய அத்தியாயம் திறக்கவே திறக்காதுஎன்று நம்பியது வீண்தானோ? மல்லிகையுடன் ஏதாவது பேசியிருப்பானோ? பார்த்தேன் என்றுதானே சொன்னாள்; பேசினேன் என்று சொல்லவில்லையே. அவனைப் பார்த்திருக்கமாட்டாள். அவன் சாயலில் ஒருவரைப் பார்த்து, அவன் என்று நினைத்துச் சொல்லி விட்டாள். மதரைத் தவிர வேறெதையும் நினைக்கக்கூடாது. முடிந்து போனதைப் பற்றி நினைக்கக்கூடாது.

''என்ன முல்லை, நீயாகவே தலையை ஆட்டிக்கொள்கிறாய்? ஏதாவது சுவாரசியமான விஷயமா? பகிர்ந்துகொள்ளக்கூடியதென்றால் சொல்லலாம்'' என்று ரோஜா பேச,

''அக்கா, முல்லையிடம் இன்று மட்டும் எதையும் கேட்காதீர்கள். நான்தான் கொளுத்திப்போட்டேன். எனக்குத் தூக்கமே இன்று வாராது. ஆனால் அவளுக்குத் தேவையான விஷயம். நானும் பல முறை அன்னையிடம் சொல்லி, சமர்ப்பணம் செய்துவிட்டுத்தான் சொன்னேன். என் மனது அவளிடம் சொல்லும்பொழுது அன்னையின் நினைவுடன் இருந்தது''.

''பூடகமாக இருக்கிறது உன் பேச்சு. ஏதோ அக்கா-தங்கைக்குள் இருக்கும் போலிருக்கிறது'' என்ற முகுந்தன், ரோஜாவுக்கு சைகை செய்தான்.

''அக்கா, தங்கையென்ற உறவைவிட அன்னையை அறிந்தவர்கள், ஏற்றுக்கொண்டவர்கள்என்ற உறவுமுறையில் நாங்கள் இருவரும் ஒன்றாக இருக்கிறோம். என்னைப் பொருத்தவரையில் வயதில் என்னைவிடச் சிறியவளாக மல்லிகை இருந்தாலும், அன்னை உறவை பொருத்தவரையில் அவளுக்கு நான் தங்கை'' என்றாள் முல்லை.

''வயது, அந்தஸ்து, பணம், உறவு ஆகிய எல்லாமே அன்னை

மீதுள்ள நம்பிக்கை, பக்தியை நிர்ணயம் செய்யக்கூடியவை கிடையாதே! சொல்லப்போனால், எனக்கு ரோஜாதான் குரு. மனைவி என்ற இடத்திலிருந்து அவளை அன்னையென்ற நிலையில்தான் வைத்து இருக்கின்றேன். அதனால் எப்பொழுதுமே சாதாரணப் பேச்சு என்ற இடமேயில்லாமல் அன்னையிடமிருந்து வருபவைஎன்று ஏற்றுக் கொள்வதால் எல்லாமே உடன்பாடாகத்தான் இருக்கும். முரண்பாடு என்ற பேச்சிற்கே இடமேயில்லை எங்கள் வீட்டில்'' என்ற முகுந்தன் ரோஜாவைப் பார்த்து, ''அப்படித்தானே ரோஜா!''

''அவர் சொல்வது சரி. நானும் அவரை என் கணவர்என்று பார்ப்பதில்லை. என்னுடைய அன்னை அவர். எனக்குரியதை, எனக்குத் தேவையானதைத்தான் அன்னை சொல்கிறார்என்று ஏற்றுக் கொள்வேன். கணவன்-மனைவி, மகன்-தந்தை, மகள்-தாய் உறவில் முரண்பாடுகள் அதிகமாக இருக்கும். ஆனால், அன்னையை ஏற்றுக் கொண்டபிறகு பகவான் சொன்ன 'முரண்பாடே உடன்பாடாகும்' என்ற தத்துவம் எங்கள் வாழ்க்கையில் நடைமுறை உண்மையாக மாறிவிட்டது''.

''ஏனக்கா, சந்தேகத்தைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்''.

''சந்தேகமென்பது ஒரு வியாதி; சற்று கடுமையானது; தீர்க்கக் கூடியதுதான். எனக்கு இவ்வளவுதான் தெரியும். அன்னையும், பகவானும் என்ன சொல்லியிருக்கின்றார்கள் என்பதெல்லாம் அவருக்குத்தான் தெரியும். நான் படித்தாலும், நினைவில் வைத்துச் சொல்லத் தெரியாது. நீங்கள் முல்லையின் சந்தேகத்தைத் தீர்த்து வையுங்கள்'' என்றாள் ரோஜா.

பகவான் விலக்க வேண்டிய விஷயங்களில் உடலுக்குரியதாகச் சந்தேகத்தை வைத்துள்ளார். ஒருவர் மனதில் சந்தேகம்என்ற பேய் ஏற்பட்டுவிட்டால், அது உடலைத் தாங்கியிருக்கும் உயிர் அழியும்வரை கூட அழியாது. சொல்லப்போனால், இறந்தபின்கூட அவர்கள் பயன்படுத்திய பொருள்களின்மீது ஒரு திரையைப் போல் படர்ந்திருந்து சந்தேகத்தை வெளிப்படுத்தும். கர்வம் சந்தேகத்தைத் தனக்கேற்ற கருவியாக ஏற்றுக்கொண்டு, அது அழியவிடாமல் பார்த்துக் கொள்ளும். சந்தேகம்என்ற குணம் முன்னேற்றத்தைக் கொண்டு



வர விடாமல் தடுத்துக்கொண்டே இருக்கும். அதை வளரவிடக்கூடாது. பாதரசத்தில் போட்ட தங்கத்தை அரித்தெடுப்பதுபோல் சிறிது சிறிதாக நம் ஆன்மாவை அரித்தெடுக்கக்கூடிய விஷமது. நம்பிக்கை இருக்கும் இடத்தில் சந்தேகம் இருக்க வாய்ப்பேயில்லை. நம்பிக்கையில் குறைவு ஏற்படும் சமயத்தில் சந்தேகம் தன் தலையை நுழைக்கும். சந்தேகம் கூடவே depressionஐத் துணைக்கு அழைத்துக்கொள்ளும். அதன் பின்னால் எதையும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. பயம் வரும், தன்னம்பிக்கை போகும், தீய சக்திகள் தொடரும். மொத்தத்தில் சந்தேகத்தை, மணலைத் துளைத்துக்கொண்டு செல்லும் நண்டுக்கு ஒப்பிடலாம். நண்டு ஓரிடத்தில் நுழைந்துவிட்டால், அந்த இடம் முழுவதையுமே எதையும் உபயோகத்திற்கு உதவாமல் அழித்துவிடுமே. அப்படிப் பார்த்தால், 'சந்தேகம்' என்பது எந்தக் காலத்திலும், யாருக்கும் வரவே கூடாது என்றுதான் சொல்ல வேண்டும். ஆமாம் முல்லை, எதற்காக சந்தேகத்தைப்பற்றிக் கேள்வி கேட்டாய்? ஏதாவதொரு விஷயம் இருக்க வேண்டுமே''.

''இருக்கிறது முகுந்தன் மாமா. மல்லிகை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அவளிருக்கும் சமயம் பார்த்துக் கேட்டேன்''.

''என்னக்கா, நீ சொல்வது முரண்பாடாக இருக்கிறதே. சிறிது நேரத்திற்கு முன், நீ பேசியதைக் கேட்டபொழுது காதில் தேன் வந்து பாய்கிறதென்று நினைத்தேன். இப்பொழுது ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுகிறாயே! என் காது தாங்குமா? நான் என்றைக்காவது உன் மீது சந்தேகப்பட்டு இருக்கிறேனா? அது கறுப்பா, சிவப்பா என்றுகூடத் தெரியாதே. நான் உன் தங்கையல்லவா! உனக்கே இல்லாதது என்னிடம் மட்டும் எப்படி இருக்கும்? நம் உறவில்/ குடும்பத்தில் அப்படி ஒன்று இருந்ததாக நான் கேள்விப்பட்டது இல்லையே''.

''இதுவரையில் இல்லை. இனிமேலும் அப்படி வரக்கூடாது என்பதற்காகத்தான்...'' என்றிழுத்தாள் முல்லை.

''அக்கா, பூடகமாகப் பேசாதே! எனக்கு விஷயத்தை முழுவது-மாக, விவரமாகச் சொன்னாலே உடனடியாகப் புரியாது. மெதுவாக,

பின்னால் யோசித்துப் பார்த்துப் புரிந்துகொள்வேன். அது என் குணம்''.

''அதனால்தான் மல்லிகை, சொல்கிறேன்'' என்று கூறிவிட்டு, முல்லை ரோஜாவிடம் நாளை வருவதாகக் கூறிவிட்டு கிளம்பினாள்.

அங்கேயே உட்கார்ந்திருந்த மல்லிகை யோசனையில் ஆழ்ந்தாள். அவளைத் தொந்தரவு செய்யாமல் முகுந்தனும், ரோஜாவும் தங்கள் வேலையில் கவனம் செலுத்த ஆரம்பித்தனர். ஒன்றுமே சொல்லாமல் மல்லிகை அன்னை அறைக்குச் சென்று நமஸ்காரம் செய்தாள்.

''அக்கா, தங்கைக்குள் ஏதோ ஒரு விஷயம். அன்னையிடம் சொல்லி, அது சுமுகமாக வேண்டுமென்று பிரார்த்தனை செய்'' என்றான் முகுந்தன் ரோஜாவிடம்.

''அவர்கள் சொன்னால், செய்யலாம்''.

''அது சரி ரோஜா, அதற்கு மேல் ஒன்றிருக்கிறது. அவர்களுக்குத் தேவை என்று நமக்குத் தெரிகிறது. கொடுத்தால் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வார்கள்என்று நமக்குத் தெளிவாகத் தெரியும்பட்சத்தில், சுயநலமாக ஒதுங்கிக்கொள்ளாமல், பரநலமாக நல்லெண்ணத்துடன் அன்னையிடம் சொல்வதில் தவறேயில்லை. நமக்குத் தேவையானதை நாம் கேட்கும்வரையில் பொறுமையாகப் பார்த்துக்கொண்டிருக்காமல், சட்டென்று கொடுக்கின்ற அன்னையை ஏன் நாமும் பின்பற்றக் கூடாது? நல்லெண்ணம் கொண்டவர்கள் இந்த உலகத்தில் மிகமிகக் குறைவு. உனக்கு நல்லெண்ணம் உண்டு என்பது எனக்குத் தெரியும். அவர்களின் கர்மத்தில் தலையிட நமக்கு உரிமையில்லை. ஆனால் விஷயம் சுமுகமாக வேண்டும்என்று ஒரு வார்த்தை அன்னையிடம் நீ கேட்டால், வந்த சுவடு தெரியாமல் பிரச்சினை வழி விட்டுவிடும். நம்முடைய தாய் நம்மைக் கேட்டா எதையும் செய்கிறார்கள், குறிப்பு அறிந்து செய்வதில்லையா? அவர்களின் பிரச்சினை என்னவென்றுகூட தெரியாமல் இருக்கட்டும். ஆனால் அவர்கள் இருவரும் அன்னையின் குழந்தைகள். உன்னையும் அவர்கள் அன்னையாகத்தான் பார்க்கிறார்கள். தெரிந்து செய்வதைவிடத் தெரியாமல் இருக்கும்பொழுது செய்வதில் அதிக ஆனந்தம் உண்டு. மறைந்திருப்பதைக் கண்டுபிடிப்பதில் ஆனந்தம்



உள்ளது. தெரிந்ததை, கேட்டதைச் செய்வதில் சந்தோஷம் வேண்டுமானால் வரலாம். ஆனால் ஆனந்தம் வாராது. ஏனெனில் ஆனந்தம் அன்னையின் தெய்வீகப் பண்பு. உனக்கொரு சந்தர்ப்பத்தை அன்னை இன்றைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆனந்தத்தைத் தரவேண்டுமென்பதற்காகத்தான் முல்லையையும், மல்லிகையையும் பேச வைத்திருக்கிறார்கள். இதைப் புரிந்து அனுபவிக்கப் போகிறாயா? இல்லை என்னிடம் சொல்லவில்லைஎன்று ஒதுங்கி வாய்ப்பை இழக்கப் போகிறாயா?'' என்று முகுந்தன் பேசப் பேச ரோஜாவின் முன்,

அன்னையின் ஆனந்த நர்த்தனக் காட்சி தெரிய ஆரம்பித்தது. ஒரு கணம் அவள் இருக்கும் உலகம் மறைந்து அன்னை இருக்கும் சூட்சும லோகத்தில் நுழைந்தாள். நந்தவனத்தில் புகுந்த தேன் வண்டு ஒவ்வொரு பூவாக நுழைந்து நுழைந்து இருக்கின்ற தேனையெல்லாம் உறிஞ்சி உறிஞ்சி, உடலெல்லாம் தேனாக மாற ரீங்காரமிட்டுப் பறக்க இயலாமல், ஆடாமல், அசையாமல் தன்னிலையிலிருந்து ஓர் இழை பிரிந்தால்கூட வெடித்துச் சிதறிவிடுவோமோ, தேனேல்லாம் கொட்டி விடுமோஎன்றெண்ணி தவம் இருப்பதைபோல், உள்ளே சென்ற ரோஜா தன்னை மறந்தாள்; உட்சோதியிற் கலந்தாள்.

நடப்பதற்கு மட்டுமே வெளிச்சம், இருளில்லாத, கண்ணைக் கூசவைக்கும் வெள்ளொளியின் வெளிச்சத்தில் எப்படி, எங்குச் செல்ல வேண்டும்என்று திக்குத் தெரியாத பாதையில், இப்படித்தான் நடந்து செல்ல வேண்டுமென்பதற்காக அவள் நடக்கும் பாதையில், மின்னலெனத் தெறிக்கும் ஒளிமயமான பாதையில் படியேறி எண்ணவே இயலாத, வரம்பில்லாத உயரத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தாள். 'அவள்' நடக்கவும் இல்லை, ஓடவும் இல்லை. பாதையும் நகரவில்லை. ஆனாலும் முன்னேறிக்கொண்டிருந்தாள். அவளை யாரோ பிடித்து அழைத்துச் செல்வதுபோன்ற பிரமை. ஆனால் அவள் கையை யாரும் பிடித்துக்கொண்டிருக்கவில்லை. நூல் பிடித்துக் கையாட்டும் வித்தைக்காரனின் கை அசைவிற்கு ஏற்றால் போல் மேலேறும் வண்ண ஆட்டப் பொம்மையைப்போன்று தன்னை மீறி தன்னை ஆட்டுவிக்கும் மாயப் பாதையில் முன்னே சென்று கொண்டிருந்தாள். அளவிடயியலாத தூரம். ஆனால் பாதுகாப்புக்

கவசம் தன்னைச் சுற்றி இருப்பதுபோன்ற தோற்றம். ஏதோ ஓரிடத்தில் பல வண்ணத்தைக் கடந்ததில் சிவப்பும், தங்கமும் சேர்ந்திணைந்த, கண்ணுக்கு மிக இதமான, உடலுக்கு ஆனந்தத்தை அளிக்கும் இடமென உள்மனது ரீங்காரமிட்டு சொல்ல, மனத்தை மயக்கும் ஆரஞ்சு வண்ண லோகத்தை வந்தடைந்தாள். ஒருவரையொருவர் நோக்காமல் எல்லோருக்கும் மிகமிக முக்கியமான வேலையிருப்பதைப் போன்று மிதந்து சென்றுகொண்டிருக்கிறார்கள். இவர்தானென கண்டுபிடிக்க இயலாத முகமற்ற உருவங்கள்; அரூபமான நிழல்கள். ஆனால் பார்க்கின்றவர்களை சந்தோஷப்படுத்தும், நிதானப்படுத்தும், ஒழுங்கான கட்டமைப்பில், நிசப்தத்தில், 'என்னவர்கள் இவர்கள்' என்ற சொந்தத்தை உணரும், வார்த்தைகளால் சொல்ல இயலாத, உணர்வில் மட்டுமே அனுபவித்து மகிழும், மலர்ச்சியான, இயற்கையான தன்மையில் உலவிக்கொண்டிருப்பவர்களின் உலகத்தை அடைந்தாள். தன்னை மறந்த நிலையில், ஆனந்தம் மட்டுமே நிரந்தரம் என்ற இடத்தில் சந்தோஷமாக சஞ்சாரம் செய்தாள். உடல் ஆனந்தத்தில் பல சுற்றுகளைச் சுற்ற வைத்தது. இலக்கே தெரியாத உலகத்தில் இயங்கிக்கொண்டிருப்பவர்களுடன் தானும் ஒருத்தியானாள்.

❄❄❄

முல்லையின் மனது காரணமில்லாமல் இங்கும், அங்கும் தாவிக் கொண்டிருந்தது. என்னவென்று தெரிந்தாலும் உதறித் தள்ளவும் இயலாத அதைரியத்துடன், போராட முடியாத இடத்தில், போராட வக்கில்லாத, ஆனால் அவ்விடத்தைவிட்டு நகரவும் பிடிக்காமல் அங்கேயே சுற்றிக்கொண்டு, ஏதாவதொரு மாய சக்தியொன்று தன்னை இழுத்துச் செல்லாதா? என்ற நிஜமில்லாத, கற்பனையும் இல்லாத, கனவென்றும் சொல்ல இயலாத குழப்பத்தின் இடையில் மனம் தத்தளித்துக்கொண்டிருந்தாலும், உள்ளிருந்து ஏதோவொன்று சிறிய குரலில் 'அமைதியாக இரு' என்ற இரு வார்த்தைகளை ஒரு முறை சொல்லியது. சொல்லியதைப் புறக்கணிப்பவர்கள் சிலர், கேட்க மறந்தவர் பலர், சொல்லியதைக் கேட்காதவர் பல்லாயிரம். ஆனால் முல்லையினுள் இருந்த 'அன்னையின் சக்தி' கேட்டதை அவள் வெளி மனதின் எல்லையைத் தொடச் செய்தது. தன்னையும் மீறிய வேகத்தில்



Peace Mother என்று சொல்லவும் ஆரம்பித்தது. ரோலர்கோஸ்டில் 360 டிகிரியில் சுழலுவதைப்போன்று Peace Mother அவளின் மனம், உடல், உணர்வில், நாடி, நரம்புகளில் சட்டென்று கலந்திட நிதானம் அடைந்தது. வெளிமனது நினைவாக Peace Mother, Peace Mother என ஒன்றின் மீது ஒன்றாக இடைவெளியிட்டு, ஒவ்வொரு முறையும் அழைக்கும்பொழுதும் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரையிலும் உணர்ந்து அனுபவித்தது. போராட்டத்தின் தொடக்கத்திலேயே அதை முன்னேறவிடாமல், அன்னையின் அமைதிக்கு வெற்றியைக் கொடுத்தாள்.

❄❄❄

''மல்லிகை, இன்று இரவு டின்னருக்கு வெளியே போகலாம். நான் வருவதற்குத் தாமதம் ஆகும். நீ தயாராக இரு'' என்ற முல்லையின் தகவலைக் கேட்டவுடன் சிரிப்பு வந்தது. நிச்சயமாக எதைப்பற்றியோ பேசப்போகிறாள். வீட்டில் இருவர் மட்டுமே இருந்தாலும் மிக முக்கியமான விஷயமென்றால் வெளியில் பேசுவதைத்தான் முல்லை தன் வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தாள். நாகரீகமான முறையில் தன் கருத்தைச் சொல்ல இதுவொரு முறை. படிப்பு, பல நல்லவைகளைக் கற்றுத் தந்திருக்கின்றது. எங்கு, எப்படிப் பேசவேண்டும்என்ற முறையைக் கவனமாகக் கையாண்டால் வாழ்க்கையில் பல பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டிய தேவையேயிருக்காது. வீடு சௌகர்யமானது; மனதைவிட்டுப் பேசலாம்; அதற்குரிய இடமும்கூட. ஆனால் அங்கு மனிதனின் சுயரூபத்தையும், சுபாவத்தையும் மிகச் சுலபமாக வெளிப்படுத்தலாம். வரைமுறையில்லாத சுதந்திரத்தை நல்ல முறையில் உபயோகப்படுத்திக்கொண்டால், அதன் பயன்கள் பார்ப்பதற்கு அற்புதமாக இருக்கும். அதற்கு மாறான விளைவுகள் ஏற்படுவதும் உண்டு. முகமூடியிட்ட வாழ்க்கையை வீட்டில் வாழ முடியாது; அல்லது இயலாதுஎன்றே சொல்லலாம். முல்லை பேசப் போகின்ற விஷயம் சற்றே சிக்கலானது. எதிர் முனையிலிருந்து எந்தப் பதில் வரும், எந்தெந்த எதிர்க் கேள்விகள் வரும்என்று தெரியாத நிலை. வீட்டில் பேசினால் உணர்ச்சி வேகம் தன்னைக் கடக்கும் நிலையை

ஏற்படுத்துமென்பது தவிர்க்க முடியாது. பொதுவிடத்தில் பேசும்பொழுது சூடான வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டாலும் மலர்ச்சியான முகத்தைக் காட்டவேண்டும். கண்ணின் தன்மை கண்ணீர் வெளிப்படுவதென்றாலும், வீட்டில் உள்ளவர் முன் அது சாதாரணம். ஆனால் வெளியிடத்தில் அழுவதற்கு அதிக தைரியம் வேண்டும். முல்லையின் எண்ணங்களின் போக்கை மல்லிகை புரிந்து வைத்திருப்பவள். அவளைப் பொருத்தவரையில் இயல்பான முறையில் வாழவேண்டும். எங்குப் பேசினாலும் பேச்சு பேச்சுதான். இடத்திற்காகப் பேச்சை மாற்ற இயலாது; அபிப்பிராயத்தை மாற்ற முடியாது. ஆனால் சுமுகமாக, அழகாகப் பேசவேண்டும். எதிராளியின் மனதின் போக்கைப் புரிந்து, தன்னை விட்டுக் கொடுக்காமல், அதே சமயத்தில் புண்படுத்தாமல் சிறந்த முறையில் பேசுவதுதான் பேச்சின் இலக்கணம் ஆகும். இதை நன்றாகச் செயல்படுத்தத் தெரிந்தவள் மல்லிகை. எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுண்டு. தீர்வில்லாத பிரச்சினை என்பது இந்த உலகத்தில் எதுவுமில்லை. நம்மால் தீர்க்க முடியாததை, சுமக்க இயலாததை வாழ்வு நம் மீது நிச்சயமாகக் கொண்டு வந்து தாராது. பிரச்சினையுடன் தீர்வையும் சேர்த்தே கொடுக்கும். பூட்டு செய்யும்பொழுதே சாவியையும் சேர்த்தே செய்வார்கள். தனித் தனியாக இருக்கவியலாத பல இரட்டைகள் நம் வாழ்விலுண்டு. மல்லிகையின் மனது முல்லை எதைப்பற்றிப் பேசப் போகிறாள் என்பதைப்பற்றி நினைக்காமல், கையில் இப்பொழுது செய்துகொண்டு இருக்கும் வேலையில் கவனத்தைச் செலுத்துவதன் மூலம் நிகழ் காலத்திலேயே வாழ்ந்தது.

தொடரும்...

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**ஆசையில்லாதவன் ஜீவனற்றவனில்லை;**

**உயர்ந்த நிலையில் உயிரோட்டமுள்ளவன்.**



# எட்டு மாற்றங்கள்
# (Eight Reversals)

கர்மயோகி

மேல்மனத்திலுள்ள மனிதன் உள்மனம் கடந்து அடிமனத்தை அடைந்து யோகம் சித்திக்கப்பெறுவான். இதையடைய மேல்மனம், உள்மனம், அடிமனம், சைத்தியப்புருஷன் என்ற 4 நிலைகளைக் கடக்க வேண்டும். ஒவ்வொரு நிலையையும் கடக்க மனம் ஒரு கட்டம் மாற வேண்டும். அதை இரண்டாகப் பிரித்து, 8 கட்டங்களாகக் கூறி சில கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளேன். Pride and Prejudice கதையில் டார்சி, எலிசபெத் வாழ்வில் ஏற்படும் மாறுதல்களை இவ்வெட்டு கட்டங்களுடன் ஒப்பிட்டுக் கூறினால் கதை நினைவு உள்ளவருக்குப் புரியும். அல்லது அக்கதையை மீண்டும் படித்துவிட்டு* இதைப் படித்தால் புரியும். இதைத் தத்துவார்த்தமாகவோ, யதார்த்தமாகவோ கூறலாம். இங்கு இரண்டாம் முறையைக் கையாள முனைகிறேன்.

உள்ளதை உள்ளபடி ஏற்றால் நாம் சாதாரண மனிதனாகிறோம். வரும் அருளையும், அதைத் தாங்கிவரும் வாய்ப்பையும் இழந்து விடுவோம். கண்ணுக்குத் தெரிவதை மறுத்து, அதன் பின்னுள்ள கருத்தை ஏற்க மனம் மாறவேண்டும். பார்த்தவுடன் எலிஸபெத் அழகியில்லை என்பதைக் கண்டு, அவன் மனம் அவளை ஏற்கவில்லை. அவன் தோற்றமான அழகை மட்டும் கண்டதால் மனம் அவளை விரும்பவில்லை. இது முதல் நிலை; சாதாரண மனித மனம். அழகில்லாவிட்டாலும் பரவாயில்லை, 'வேறென்ன இருக்கிறது?' என ஆராயத் தோன்றும் நிலை அதுவன்று. அந்த வயதுமில்லை. அப்படி மனம் யோசிக்க அவளுடைய அந்தஸ்தோ, குடும்பமோ, குடும்பத்தைச்

---

* மலர்ந்த ஜீவியம் - மார்ச் 2002 - இதழில் வெளிவந்துள்ளது. Pride and Prejudice, பக்கம் 32-54 *(for reference)*.

மலர்ந்த ஜீவியம் - ஏப்ரல் 2002 - Pride and Prejudiceஇல் *Life Divine*இன் தத்துவங்கள், பக்கம் 28-47 *(for reference)*.

சேர்ந்த மற்றவர் நிலையோ இல்லை. எளிய மனம் முதல் நிலையில் யதார்த்தமாக வெறுக்கிறது. I.

## இரண்டாம் நிலை II :

தற்செயலாய் அவளது கண்களில் உள்ள ஒளி அவனைக் கவர்கிறது. எதையும் பொருட்படுத்தாமல், எந்தச் சட்டத்திற்கும் கட்டுப்படாமல், தன் செல்வத்தையும் அலட்சியப்படுத்தி, அனைவர் போல உலகின் தோற்றத்தை ஏற்றுப் பணியாமல், சுதந்திரமாக, விளையாட்டாக, கலகலவென அவள் பழகுவது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. கண்ணுக்குத் தெரிவதை - அழகில்லை என்பதை - புறக்கணித்து, மனத்திற்குத் தோன்றும் உண்மையை - இவள் உயர்ந்த மனுஷி - ஏற்று அதை விழைவது இரண்டாம் நிலை.

எவருடனும் டான்ஸ் ஆடாத டார்சி எலிசபெத்துடன் டான்ஸ் ஆட விரும்புகிறான். இரண்டு முறை மறுத்துவிடுகிறாள். மூன்றாம் முறை அவனுடன் டான்ஸ் ஆடும்பொழுது அவன் ஆத்திரப்படும்படிப் பேசுகிறாள். அவள் வருமானம் £50. அவன் வருமானம் £10,000. அவள் தாயார் கட்டுப்பாடில்லாமல் அநாகரீகமாகப் பேசுகிறார். அவள் தங்கைகள் அளவில்லாமல் கும்மாளம் போடுகிறார்கள். அவ்வூரில் அப்பெண்களைப்போல் மட்டமான பெண்களில்லை. இக்காரணங்களால் பிங்லி ஜேனை மணப்பதைத் தடுத்த டார்சி, எலிசபெத் மீது எழும் காதல் வேகம் தணியாமல், மீண்டும் அவளை லேடி காதரீன் வீட்டில் ஆர்வமாக நாடுவது அடுத்த கட்ட மாற்றம். அது மூன்றாம் நிலை மாறுதல் III.

அவள் எதையும் கண்டுகொள்ளவில்லை. மாறாக, அவனுக்குப் பழகத் தெரியவில்லை; தன்னையே வெட்கமின்றி பார்க்கிறான். தன் தமக்கைக்குத் துரோகம் செய்தவன்என மனம் பதறுகிறாள். மேலும் அழகன் விக்காமிற்காகப் பரிந்து பேசும் மனநிலையிலிருக்கிறாள். தன் குடும்பத்தின் மட்டமான நிலை அவளுக்குத் தெரியவில்லை. அவள் மனநிலை அவனுக்குத் தெரியவில்லை. நடைமுறையில் அலட்சியப்படுத்துகிறாள். அதையும் புறக்கணித்து, 'என்னை மணக்க வேண்டும்' என்பது நான்காம் நிலை மாறுதல் IV.



அவன் விருப்பத்தை மறுத்ததுடன், ஆவேசமாக, அதிக காரமாக அவனைச் சுயநலமி, கர்வி, அல்பம், திமிர் பிடித்தவன்என வாய் ஓயாமல் திட்டுகிறாள். எவராலும் அதைப் பொறுக்க முடியாது. விக்காம் தறுதலை, பொய்யன். தன்னிடம் £3000 அநியாயமாகப் பெற்றவன். தன் தங்கையைக் கடத்த முயன்றவன். அவனுக்கு ஆதரவாக அவள் பரிந்து பேசுகிறாள். அவற்றையெல்லாம் நேரடியாகக் காதால் கேட்ட பின் எவரும் அப்பெண்ணைக் கனவிலும் கருதமாட்டார்கள். **அத்தனையையும் பொருட்படுத்தாத மனமாற்றம் மனிதனுக்குரியதன்று**. இருப்பினும் உள்ளதை அவளிடம் எடுத்துக் கூறி, அவளைப் பெற நினைப்பது அடுத்த கட்ட மனமாற்றம். கடிதம் எழுதுகிறான். அது ஐந்தாம் நிலை V.

அதன் பிறகு பெம்பர்லியில் தற்செயலாக சந்திக்கிறான். அவள் நடத்தை அத்தனையையும் மறந்து, எப்படியாவது அவளைத் திருப்திப்படுத்த நினைத்து, இதமாகப் பேசி, கார்டினருடன் மரியாதையாகப் பழகுகிறான். இது ஆறாம் நிலை மனமாற்றம் VI.

தன்னை மறுத்தவள், திட்டியவள், அவமானப்படுத்தியவள் என்பது எல்லாவற்றையும் புறக்கணிக்கும் மனமாற்றம் எளிதன்று. அவற்றைக் கடந்த உண்மையை அவளிடம் கண்டிருந்ததால்தான் அது முடியும். தங்கையை அறிமுகப்படுத்துகிறான். பிங்லியை அவளிடம் அழைத்து வருகிறான். வீட்டிற்கு விருந்திற்கு அழைக்கிறான். இவை மனித மனத்திற்குரிய சுபாவமன்று. மறுநாள் மீண்டும் அவளை 'என்னை மணக்க வேண்டும்' எனக் கேட்கப் போவது ஏழாம் நிலை மனமாற்றம் VII.

எளிய காரியங்கள் நேரடியாக, சுலபமாக முடியும். பெரிய காரியங்களுக்குத் தடையெழும். பெரிய மனிதனுக்கு, பெரிய நேரத்தில், பெரிய காரியங்கள் எளிதில் பூர்த்தியாகும். பிங்லி செல்வம் படைத்தவன், இளைஞன், திருமண வயது; எந்தப் பெண்ணும் அவனை

மணக்க விரும்புவாள். அது சிறப்பற்ற திருமணம். அத்திருமணம் நேரடியாக நடைபெறும். டார்சி குறுக்கிடாவிட்டால், பிங்லி அவ்வூருக்கு வந்த புதிதில் அவளை மணந்திருப்பான். திருமணத்திற்கு முன்னும், திருமணமான பின்னும் அங்கு எந்தச் சிறப்புமில்லை. சார்லட் காலின்ஸ் திருமணம் அது போன்றது. அதில் காதலுமில்லை, இலட்சியமுமில்லை. அவள் தேடியது பாதுகாப்பு. அவனுடைய உத்தியோகம், எதிர்கால வாரிசு (£2000) அதைத் தரும். அவன் தேடியது பணிவான, பிரியமான பெண். அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சியது. டார்சி பெருஞ்செல்வன், இலட்சியவாதி. எலிசபெத் போன்ற அறிவாளியின் கண்களில் உள்ள ஒளியை அறியும் திறமை உள்ளவன். சுயநலமான கர்வியானாலும், எந்தக் குறையுமற்ற இளைஞன். அவனை மணக்க லேடி காதரீன் மகள் பெருஞ்செல்வத்-துடன் காத்திருக்கிறாள். அதைத் தியாகம் செய்யும் இலட்சியம் உள்ளவன். **அதையும் தியாகம் செய்தாலும், 'இது பொறும்' என்ற தெளிவுடையவன்**. அவனை எளிதில் பெறமுடியாது. மெரிடன் கிராமத்தில் எந்தப் பெண்ணும் டார்சியை விரும்பி மணக்கக் காத்து இருக்கிறாள். பிங்லியின் சகோதரி £20,000 பவுனுடன் அவனை ஏற்கத் தயார். அதைவிட எலிசபெத் உயர்ந்தவள்என்ற அறிவு டார்சிக்குண்டு. அதனால் அவளை எளிதில் பெறமுடியாது. அவளைப் பெற அவன் மனம் மாறியது போதாது. தனக்குப் பாதகம் விளைவித்த பரம எதிரியை சகலராக ஏற்க டார்சி தயாராக வேண்டும். அவன் செய்த கேவலமான காரியத்தை மூடி மறைக்க, அவன் ஒளிந்துள்ள ஏழைகள் வாழும் இடத்திற்கு அவனைத் தேடிப் போக வேண்டும். அதற்குரிய செலவைச் செய்ய வேண்டும். அவனுக்கு வேலை வாங்கித் தர வேண்டும். இத்தனை அவலங்களையும் அவளுக்காகச் செய்ய வேண்டும். அதுவும் அவளறியாமல் செய்ய வேண்டும். அப்படித் திருமணமானால், அநாகரீகமான மிஸஸ் பென்னட்டுக்கு மருமகனாக வேண்டும். இது மனத்தால் கற்பனை செய்தாலும் வெறுப்புதரும். அவன் தேடும் அன்பு அமிர்தமான காதல். இத்தனைக் கட்டங்களைக் கடந்து பெற வேண்டியது என்பதால் இக்கடைசி கட்டமான VIII எட்டாம் கட்ட மன மாறுதல் அவனை எதிர்கொண்டது.



➛ டார்சிக்குத்தான் எலிசபெத் மீது தீராக் காதல்.

அவள் மனம் அழகன் விக்காமை நாடியது.

அவன் மோசக்காரன்எனத் தெரிந்த பின்னரும், தங்கை வாழ்வை அழித்த பின்னும், அவள் மனம் அவனைக் கடிந்துகொள்ளவில்லை. கடைசிவரை அவனுக்குப் பண உதவி செய்கிறாள்.

டார்சி மீது அவளுக்கு மரியாதை ஏற்படுகிறது.

அவனையறிந்தபின் நன்றி எழுகிறது.

அவன் செல்வம் பெரியது.

பிரம்மாண்டமான பெம்பர்லி அவளைக் கவர்ந்தது.

டார்சி மனத்தில் எழுந்தது அமரத்துவம் வாய்ந்த அமிர்தமான உணர்வு. காதலெனப்படும்.

அவள் பெற்றது திருமணம்.

பெரிய இடத்துச் சம்பந்தம்.

கனவிலும் நினைக்க முடியாத சம்பந்தம்.

நன்றியுடன் ஏற்று மகிழ்கிறாள்.

அதைப்பெற அவளும் அவள் மனத்தை 8 கட்டங்களில் மாற்ற வேண்டியிருக்கிறது.

அது அவளுக்கு எளிதாக இல்லை.

## எலிசபெத் :

முதல் நடனத்தில் டார்சி, அது நாகரீகம் குறைந்த ஊர்; எல்லாரும் வசதி குறைந்த மக்கள்; தன்னைப் போன்ற செல்வர்கள் அங்கில்லை; பிங்லியைப் போன்றவர்களுமில்லை; அதிகபட்ச செல்வம் அங்கு பென்னட்டுக்குத்தான் உண்டு; அவர் மனைவி வக்கீல் மகள்; (இங்கிலாந்தில் அன்று வக்கீல், டாக்டர் தொழில்கள் இன்று எலக்ட்ரீஷியன் போன்ற அந்தஸ்து உடையது. அக்குடும்பங்களில் அந்தஸ்து உள்ளவர் பெண் எடுக்கமாட்டார்கள். அந்த வக்கீல்கட்கு நம்மூர் வக்கீல் குமாஸ்தாவின் அந்தஸ்தேயுண்டு.) மிஸஸ் பென்னட்டின் தங்கை ஒரு வக்கீலை மணந்தவள்; மிலிட்டரி ஆபீஸர்கட்கு £300 சம்பளம், அது வருஷத்திற்கு; இப்பெண்கள்

அந்த மாப்பிள்ளைகளைத் தேடுகிறார்கள். மிஸஸ் பென்னட் சிறு வயதில் அப்படிப்பட்ட Red coat சிவப்பு யூனிபார்மைப் பார்த்து நெகிழ்ந்தவர். இன்றும் அது தனக்கு ஆர்வம் தருகிறதுஎன்று வெட்கமின்றி பெண்களிடம் கூறுபவர். சார்லட், ''அவனுக்குப் பணம் இருக்கிறது. அதனால் அவன் கர்வமாக நடக்கும் உரிமையுடையவன்'' என்று எலிசபெத்திடம் கூறுகிறாள். அதுவே அனைவருடைய அபிப்பிராயம். கிடைக்காதுஎன்பதால் டார்சிமீது வெறுப்பு. கிடைக்கும் எனில், பதறுவார்கள். பிங்லி வருவதைக் கண்ட பென்னட் குடும்பம் பதைத்து, துடிப்பதைப் படத்தில் கண்டோம். அந்த நிலையில் டார்சி, ''பரவாயில்லை. அவள் அழகியில்லை'' என்று கூறியதைக் கேட்டவுடன், அவனை அவள் மனம் மறுக்கிறது. அவன் பெருஞ்செல்வத்தைப் புறக்கணிப்பது அவளுடைய முதல் மனமாற்றம். இது அந்த ஊரில் பிறந்த எந்தப் பெண்ணாலும் செய்ய முடியாத, நினைக்க முடியாத செயல். முதல் மாற்றம் *(I)*.

II. பெரியது, கிடைக்காது என்றவுடன் அனைவரும் அவனைக் கவனிப்பதை நிறுத்திவிடுகிறார்கள். அவன் கவனம் எலிசபெத் மீது எழுவதை சார்லட் கவனிக்கிறாள். அவனை விரும்பும் காரலின், பிங்லியின் சகோதரி பார்க்கிறாள். அவளிடம் டார்சி, ''நான் எலிசபெத் கண்ணழகில் திளைக்கிறேன்'' என்று கூறுகிறான். எவருடனும் தனக்கு டான்ஸ் ஆட விருப்பமில்லை என்றவன், எலிசபெத்தை நாடி ஆட வரவேண்டும்எனக் கேட்கிறான். இது பெரிய வாய்ப்புஎன சார்லட் எலிசபெத்திற்கு எடுத்துரைக்கிறாள். £300 பவுன் சம்பாதிக்கும் அழகனை நினைக்காதே, £10,000 பவுன் உள்ளவனை நாடுஎன புத்திமதி கூறுகிறாள். விக்காம், எலிசபெத்திற்குப் பணமில்லைஎனத் தெரிந்தவுடன், பணம் புதியதாய் பெற்ற மிஸ் கிங்என்ற பெண்ணை அதிகம் கவனிக்கிறான். அவன் மனம் எலிசபெத் மீதில்லை. அவனே வந்து இருமுறை டான்ஸ் ஆடக் கேட்டபின்னும், அவன் பணம் அவளுக்குப் பொருட்டாக இல்லை. தன்னை டார்சி விரும்புகிறான் என்ற நினைவும் அவள் மனதில் எழவில்லை. பெரும்பணத்தைப் பொருட்படுத்தாத மனமாற்றம் இரண்டாம் நிலை மாற்றம்.



III. லேடி காதரீன் ஊரில் மீண்டும் டார்சியைச் சந்திக்கிறாள். அவன் தினமும் சார்லட் வீட்டிற்கு வந்து எலிசபெத்தைப் பார்த்துப் பேசுகிறான். அவனுக்குத் தன்மீது அபிப்பிராயம் உண்டுஎன அவளுக்குத் தோன்றவில்லை. ''என்னைப் பார்க்க டார்சி இதுபோல் இதுவரை வந்தது இல்லை. உன்னைப் பார்க்கவே அவன் வருகிறான். அவனுக்கு உன்மீது ஆசை, காதல்'' என சார்லட் எடுத்துக் கூறியபின்னும், எலிசபெத் மனதில் அது படவில்லை. அதைத் தொந்தரவாகவே நினைக்கிறாள். அந்த அளவுக்கு அவள் மனம் அவனையும், அவன் பணத்தையும் விட்டு விலகி நிற்கிறது. இது மூன்றாம் கட்டம். அவன் கர்வமான நடத்தை முதலில் அவளை விலக்கியது. அதை மாற்றி, அவளை நாடியபொழுதும், டான்ஸ்ஆட விரும்பியபொழுதும், மனம் மாறாத அளவு அவள் விலகியிருந்தது. மூன்றாவதாக அவளைச் சார்லட் வீட்டில் தேடி வந்து பார்த்துப் பேசியபொழுதும், அது மனதில் படாத அளவு விலகியது மூன்றாம் நிலை.

IV. அடுத்தது, ''என்னை மணக்க வேண்டும்'' என நேரடியாகக் கேட்ட பொழுதும், அவன் மனக்குமுறலை அவள் நேரில் பார்க்கிறாள். அந்த நிலையிலும் அவனுடைய காதல், அந்தஸ்து, பணம், பெறற்கரிய பேறு அவளைத் தொடாத அளவு அவள் மனம் அவனைவிட்டு விலகி நின்றது நான்காம் கட்ட மாறுதல்.

V. டார்சி அவள் குடும்பம் மட்டமானதுஎன எடுத்துக் கூறும்வரை அவளுக்கு அது ஒரு பிரச்சினையாக இல்லை. அவன் சொன்ன பின்னும், அவன் மீது கோபம் வந்ததே தவிர, அவன் கூறிய உண்மையை அவள் கருதவில்லை. **தன் குடும்பம் மட்டம்என எவருக்குமே தோன்றாது. தோன்றினால் ஏற்க மனம் வாராது**. அவன் கடிதத்தைப் பல முறை படித்தாள். கடிதம் மனப்பாடமாயிற்று. அதன் பின் கொஞ்சமாகத் தன் குடும்ப நிலை அவல நிலையென உணர்ந்தாள். சிறிது வெட்கப்பட்டாள். 'இவ்வளவும் தெரிந்து டார்சி தன்னை எப்படி விரும்புகிறான்? காதல் எழுந்த காரணம் என்ன?' என்று யோசனை செய்யும்பொழுது, மனதில் டார்சி மீது மரியாதை தோன்றியது.

அவன் கர்வியல்ல, நடத்தை கர்வமானது; பழக்கம் போதாதுஎன அறிந்து ஆச்சரியப்பட்டாள். இது அவளைப் பொருத்தவரை முடியாத மனமாற்றம்.

VI. அதன் பின் அவன் மீது நன்றி எழுந்தது. நாளடைவில் தன் குடும்பத்தை நினைத்து வெட்கப்பட்டாள். எவரும் தன் குடும்பத்தைப் பற்றிப் பெருமைப்படுவார்கள். தன் கருத்தைத் தகப்பனாரிடமும், லிடியாவை பிரைட்டனுக்கு அனுப்பும்முன் கூறினாள். தம்மைப் பற்றிக் குறைவாக நினைப்பவரும், தம் குடும்பம் மட்டமானதுஎனக் கருதமாட்டார்கள். அதுவும் டார்சி மீது காதலை எழுப்பவில்லை. டார்சி தவறானவன் இல்லைஎன முடிவு செய்தாள். அவனை மறுத்தபின் மீண்டும் அவனைத் திருமணம் செய்துகொள்ள முடியும்என அவளுக்குத் தோன்றவில்லை. இது ஆறாம் கட்ட மனமாறுதல்.

VII. பெம்பர்லியைப் பார்த்தபின் பெம்பர்லி மீது ஆசை வருகிறது. அதுவும் டார்சி மீது எழவில்லை. மீண்டும் டார்சி அவளைக் கேட்க முடியாது. ஒரு முறை மறுத்தபின் எவரால் அடுத்த முறையும் விருப்பம் தெரிவிக்க முடியும்?

VIII. இந்த நிலையில் திருமணம் முடியாது. திருமணம் முடியும் அளவு அவள் மனம் மாறவில்லை. அதுவும் மாறினால்தான் திருமணம் முடியும். லிடியா ஓடிவிட்டாள். அவளே டார்சியிடம் அதை பாவமன்னிப்பு போல் சொல்ல வேண்டியிருக்கிறது. அது பெரிய மனமாற்றம். எவராலும் எளிதில் முடியாத காரியம், அழ வேண்டிய நிலை, பகிரங்கமான அவமானம். எவனை இவள் காதலித்தாளோ, அவனே இந்த பாதகத்தைச் செய்தது வேறு மனத்தைப் புண்ணாக்குகிறது. தன் மனம் மாறி, எதிரியான டார்சியின் முன் அவமானப்பட்டு, ஊரெல்லாம் கேலி செய்த பின்னரே அவள் மனமாற்றம் ஊர்ஜிதமாகிறது. திருமணம் நடக்கிறது.

❀❀❀





**உயர்ந்த சாந்தி, நம்பிக்கை (certitude) உடலும் மாறும்.**

✡ பணம் வந்தால் வசதி வரும்; ஏழ்மை மாறும்.

வரும் பணம் அளவு கடந்து வந்தால், சிறிய வீடு பெரிய வீடாகும்.

பணம் வருவதால் பண்பு வரவேண்டுமானால், பணத்தின் அளவு அதிகமானால் போதாது, பணத்தின் தன்மை உயர்வாக இருக்க வேண்டும்.

அரிசி வியாபாரத்தில் வரும்பணம், பழக்கடை பெரியதாவதால் வரும் பணம் பண்பைப் பெற்றுத் தாராது.

படிப்பால் வரும் வருமானம், சிறந்த தொழில் வளர்வதால் பிரபலம் வந்து பெருகும் வருமானம், படிப்பையும், அத்துடன் பண்பையும் சேர்த்துக் கொண்டு வரும்.

✡ தேஜஸ் அது போன்றதே.

✡ போலீஸுக்கு அடங்காத அராஜகம், ரிஸர்வ் போலீஸுக்கும், ஸ்பெஷல் போலீஸுக்கும் அடங்கும். இராணுவம் வந்தால், எதுவும் அடங்கும்.

✡ பணம் வந்தால் ஏழ்மை போகும், நல்ல பழக்கம்வரும்எனக் கூற முடியாது.

கெட்ட பழக்கம் தவறாமல் வர வாய்ப்புண்டு.

பணம் வரும்வழி, வழியில் உள்ள பழக்கங்களைச் சேர்த்துக்கொண்டு வரும்.

பணம் வந்து, அதனால் படிப்பு வந்து, அப்படிப்பால் வரும்பெரிய வருமானம் பக்குவத்தையும் கூடவே கொண்டுவரும்.

✡ அறிவு முகப்பொலிவைத் தரும்.

அது ஆத்ம ஞானமானால், அகம் பொலிவு பெற்று, முகத்தில் மிளிரும்.

ஞானம் உயர்ந்து பிரம்ம ஞானமானால், அதை 'பிரம்ம வித்யா' எனக் கூறுவர்.

உயர்ந்த ஞானம் உடலையும் தொடும்; உடல் பளபளக்கும்.

✡ சாந்தி குணத்தைச் சாந்தப்படுத்தி, 'சாது' என மாற்றும்.

சாந்தம் மேலெழுந்தவாரியானால், சாது ஒரு நாள் மிரண்டு காடு கொள்ளாத கோபம் எழும்.

சாது மிரண்டு எழாத அளவு சாந்தம் உண்டு.

அது குணத்தைக் கட்டுப்படுத்தாமல், சாந்தமாக மாற்றும்.

சாந்தி உயர்ந்து, அதனால் நம்பிக்கை எழுவதை Certitude என்கிறார் அன்னை.

அது உடலையும் தொடும்; உடல் மிருதுவாகும்.

உடல் திருவுருமாற அச்சாந்தி உதவும்.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தாழ்ந்த வாழ்வை விட்டு மனிதன் உயர்ந்த வாழ்வை நாடினால், எதையெல்லாம் விட்டுவிட்டு உயர்ந்ததைத் தேடினானோ, அவையெல்லாம் இந்த வாழ்விலும் பெரிய அளவிலிருக்கும்.

***விட்டு நகர்ந்ததும் தொட்டுத் தொடரும்.***



# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(மார்ச் 2008 இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**79. உனக்குப் பொறுக்காதவற்றை (sensitive) அறிவதுபோல் வாழ்வை அறிய வேண்டும்.**

நமக்கு வரவேண்டிய பிரமோஷன் அடுத்தவருக்குப் போய்விட்டது; பெரிய வரன் வந்தது எனக்கு, முடிந்தது எதிர்வீட்டுப் பெண்ணுக்கு; பந்தியில் மரியாதையில்லாமல் நடத்துவது; வயதில் சிறியவர் வயதிற்குரிய மரியாதை தாராதது; தங்கை என்னிடமிருப்பதைவிட அண்ணனிடம் அதிக நம்பிக்கை வைப்பது; நமக்குக் கீழே வேலை செய்தவன் கீழே நாம் வேலை செய்யவேண்டிய நிலை பொறுக்க முடியாதவை. பல உதவிகள் நம்மிடம் பெற்றவன் ஓர் உதவி செய்ய மறுப்பது, நமக்கு செய்யவேண்டிய உதவியைப் பிறருக்குச் செய்வது பொறுக்காதவை. மரியாதை, உரிமை போகும்பொழுது மனம் புழுங்கும். நாம் பாதிக்கப்படுவதுபோல் பிறர் பாதிக்கப்படுவதை நாம் பொருட்படுத்துவதில்லை.

பிறரைக் கடந்த நிலையில் வாழ்வுள்ளது.

நாம் பொறுக்காததுபோல் வாழ்வு பொறுக்காது.

நமக்கு ஜீவன் உள்ளதுபோல் வாழ்வுக்கும் ஜீவன் உண்டு.

அதை அறிவது பெரிய விஷயம்.

நமக்கு உரிமையுள்ளவரை வாழ்வு பொறுக்கும். நம் உரிமையின் எல்லையைக் கடந்து பேசத் தோன்றுவது அதிகப்பிரசங்கித்தனம். அப்படிச் செய்தால் வாழ்வு எதிரான பலன் தரும். DMKயைப் பற்றி இராஜாஜியை அவர் முதலமைச்சராக இருந்தபொழுது அபிப்பிராயம் கேட்டார்கள். அவர் அரசியல் தலைவர். DMK அரசியல் கட்சி. நேரு அவர்களை 'நான்சென்ஸ்' என்றார். அது அரசியல் அபிப்பிராயம். அரசியல் அபிப்பிராயத்தைக் கடந்து religious, spiritual opinion மதாச்சாரியர்கள்போல இராஜாஜி பேசினார், "அவர்கள் ராட்சசர்கள். அவர்களுக்குள்ளே அடித்துக்கொண்டு சாவார்கள்" என்றார். 10

ஆண்டுக்குள் அவர் DMK மேடையிலிருந்து DMKவை ஆதரித்துப் பேசும் நிலை வந்தது. ஒருவர் நிலம் வாங்க முயன்றார். நண்பர் தாம் விலை பேச முன்வந்தார். முடியும் பொழுது தமக்கு அதில் பாதிவேண்டும்எனக் கேட்டார். பிறர் வாங்கும் சொத்தில் பங்கு எவரும் கேட்கமாட்டார்கள். வாழ்வு அதை அனுமதிக்காது. ஓராண்டுக்குள் இவர் மனையை சொற்ப விலைக்கு சர்க்கார் எடுத்துக்கொண்டது.

- ❀ பிறர் புண்படுவது எளிய செயல்.
- ❀ வாழ்வு புண்படுவது பெரிய செயல்.

மனிதன் நடத்தைத் தவறாக இருப்பது, நாணயம் தவறுவதுண்டு. அதை வீட்டிற்குள்ளே செய்தால் குற்றம். நடத்தை நாணயம் தவறினால் தவறுபவன் தண்டனை பெறுவான். நெருக்கமான இடத்தில் அதைச் செய்தால் வாழ்வு புண்படும். குடும்பம், நட்புஎன்பவை வாழ்வு ஏற்படுத்தியவை.

- ❀ தவறு வேறு.
- ❀ வாழ்வை மீறித் தவறுவது வேறு.

ஒருவனை அடித்தால், அது அடிதடி சண்டை; போலீஸ்காரனை அடித்தால் அது சர்க்காருக்கு எதிரான செயல். கோர்ட்டில் எதிரியைத் திட்டுவது திட்டு; ஜட்ஜைத் திட்டினால் (contempt of court) ஜெயிலுக்குப் போகவேண்டும்.

**வாழ்வின் நயங்களை அறிந்து, அவை திருப்திப்படும்வகையில் நடக்கவேண்டும். அவற்றைச் சீண்டக்கூடாது.**

**80. அழைப்பு ஆழத்தில் ஆனந்த உணர்வு கொடுப்பதைக் கவனி.**

அழைப்பு பிரச்சினைகளைத் தீர்க்கும்.

மேலும் அழைப்பு வாய்ப்பை உற்பத்தி செய்யும்.

இவையிரண்டும் வாழ்வுக்குரியவை.

ஆத்மாவுக்குரிய மௌனத்தையும், காட்சி, நேரடி ஞானம், ஞானத்தையும் அடுத்த அடுத்த கட்டங்களில் அழைப்பு தரும்.

அதற்கும் அடுத்தது சுமுக உணர்வு.



சுமுக உணர்வு ஆனந்தம் தருவது சத்தியஜீவியம்.

“என் சந்தோஷம் இரு மடங்காகி ஒரு வாரம் இருந்தது” என ஒரு அன்பர் எழுதினார். இது யோக சித்தி. Mother's joy swelling up. அன்னையின் ஆனந்தம் பொங்குவது.

ஒரு நிமிஷம் இது கிடைப்பது அனுபவம்.

நிலையாகக் கிடைப்பது சித்தி.

இந்த ஆனந்தத்தில் உலகம் சிருஷ்டிக்கப்பட்டது.

ஆனந்தத்தில் தோன்றி, ஆனந்தத்தில் வாழ்ந்து, ஆனந்தத்தை அடைவது சிருஷ்டி.

**சமர்ப்பணம் இவ்வானந்தத்தால் சரணாகதியாகும்.**

அன்றாட எளிய நிகழ்ச்சிகளில் சமர்ப்பணம் இந்த ஆனந்தத்தைத் தருமானால், ஒரு முறையும் தருமானால், அவர் அன்னை விரும்பும் அன்பர். அவருக்குப் பிரச்சினைகள் பிரச்சினையில்லை.

இந்த ஆனந்தமும் மனம், உணர்வு, உடல், ஆத்மா என்ற 4 நிலைகளுள் மேலெழுந்தவாரியாகவும், ஆழ்ந்தும் உண்டு (consciousness and substance).

மனம்பெறும் ஆனந்தம் பரந்தமனம் தரும்.

உணர்வுபெறும் ஆனந்தம் உறவை இனிக்கச் செய்யும்.

உடல்பெறும் ஆனந்தம் நன்றியால் பூரித்து, உடல் புளகாங்கிதம் அடைதல்.

பரந்தமனம் நம் விஷயத்திலும், நமக்கு வேண்டியவர் விஷயத்திலும் அடைவது மேல்நிலை; பிறர் விஷயத்தில் எழுவது ஆழ்ந்த நிலை.

வேண்டியவர் உறவு இனிப்பது சிறியது. எவர் உறவும் இனிப்பது பெரியது.

உடல் பூரிப்பது ஒரு நிலை. புல்லரிப்பு ஆழ்ந்த நிலை.

நோக்கம் இந்த ஆனந்தம் பெறுவதானால் அன்பன் சாதகனாவான்.

ஆனந்தம் அறிவுக்கு அழகாகத் தெரியும்.

ஆனந்தம் ஆத்மாவுக்கு அன்பாகத் தெரியும்.

ஆனந்தம் உணர்வுக்கு சந்தோஷமாகும்.

அருள் உள்ளே வந்தால் அன்பாக வெளிப்படுகிறது.

அருள் உள்ளே ஆனந்தமாக ஆத்மாவில் எழுந்து அன்பாகிறது.

அழைப்பு வாய், மனம், நெஞ்சம், ஜீவன்எனப் பல நிலைகளிலிருந்து எழும்.

ஒவ்வொரு நிலைக்குரிய ஆனந்தம் ஒரு வகை.

இதைக் கவனிப்பது ஆத்ம விழிப்பு.

**81. எவரையும் அவருக்குத் தாங்க முடியாத இடத்தில் (Sensitive point) தொடாதே.**

சில ஊர்களுக்குக் கெட்ட பெயருண்டு.

சில ஜாதிக்கும் அது சில ஊரில் உண்டு.

ஓர் ஊரில் புகழுடைய ஜாதிக்கு வேறு ஊரில் நல்ல பெயரிருக்காது.

(Sensitive) சூடான சொரணையுடையவருக்கு இது போன்ற விஷயத்தில் positive பாஸிட்டிவாகக் கூறினாலும் கோபம் வரும்.

வக்கீலுக்கு எந்த ஊரிலும் மரியாதை.

மத்தியஸ்தத்தில் வக்கீல் பேசுவதை ஏற்க முடியாதவர் வக்கீல்போலப் பேசுகிறீர்கள்என்றால் வந்த விஷயமே கெட்டுவிடும்.

குடும்பம், ஊர், தொழில், ஜாதி, வயது, படிப்பு, கட்சி, இவற்றைப் பற்றிப் பேசுவதால் மனம் புண்படும். அவற்றை அடியோடு விலக்குதல் அவசியம்.

சிலருக்கு இப்படிப் பேசுவதே பழக்கமாக இருக்கும்.

‘‘கொட்டினால்தான் தேள்'' என்பது அவர் சட்டம்.

அவர்கட்குரிய முறை இது.

இப்படிப் பேச சந்தர்ப்பம் வந்தால் அவர்களால் பேசாமலிருக்க முடியாது.

‘‘நீ டிரைவர்தானே?'', ‘‘உனக்குப் பேச வயதில்லை'', ‘‘இது உங்கள் ஊர் பாஷை'', ‘‘படிக்காதவருக்குப் பேச உரிமையில்லை'', ‘‘உங்க ஜாதிக்கே முரட்டு ஜாதி, முட்டாள் ஜாதிஎனப் பெயர்'', ‘‘நீ கம்யூனிஸ்ட் அல்லவா?'' என்ற சொற்களைச் சொன்னால் வம்பு வரும்.

அந்த சந்தர்ப்பம் வரும்பொழுது பேசத் துடிக்கும்.

குளப்பாக்கம் என்ற ஊர் பெயர் சொன்னாலே சிரிப்பார்கள்.

அந்த ஊர்க்காரரிடம் அதைத் தொட்டுப் பேசக்கூடாது.

இவ்விஷயத்தில் மனத்தைக் கட்டுப்படுத்த முயன்றால் உள்ளே போராட்டம் பெரியதாக இருக்கும்.

அமெரிக்கர் நாகரீகமற்றவர், ஹாலண்டு நாட்டினர், ஸ்காட்லண்ட் நாட்டினர் கருமிகள்எனப் பெயர் பெற்றவர். நாம் வெளிநாடு போனால் நம்மை அந்த நாளில் மகாராஜா, பாம்பாட்டி என நினைப்பார்கள்.

இந்தியாவில் ராஜாக்கள் அதிகம்.

இங்கு தெருவில் பாம்பாட்டியைக் காணலாம்என அறிவார்கள்.

நம்மை ‘‘நீங்கள் ராஜாவா, பாம்பாட்டியா?''எனக் கேட்டால் நம் மனம் என்ன பாடுபடும்.

இதுபோன்ற discipline கட்டுப்பாட்டை 1 மாதம் பயின்றாலும் பலனுண்டு; 1 வாரமும் போதும்.

இந்தக் குணமுள்ளவர்க்கே இது பொருந்தும்.

அனைவர்க்கும் பொதுவாகப் பொருந்தும்.

குறிப்பாகப் பொருந்தாது.

**82. சிறு தவறும், குறையும் ஏற்படாவண்ணம் 3 நாள் அல்லது குறைந்தபட்சம் 24 மணி நேரம் செயல்படுதல்.**

தவறின்றிச் செயல்பட மனிதன் தெய்வமாக இருக்க வேண்டும்.

கடிதம் எழுதி மடித்துக் கவரில் போட்டபின் எடுத்துப் பார்த்தால் நாம் செய்த வேலை நமக்கே சிரிப்பு வரும்; பேப்பர் கோணலாக இருக்கும்.

ஜவுளிக்கடையில் 1 புடவை வாங்க பெண்கள் பல புடவைகளைப் பரிசீலனை செய்வர். கடையில் அப்புடவையை மீண்டும் மடித்து வைக்கும் நயம், பொறுமை பெரியது. 1 நாள் முழுவதும் நம் செயல்களை நாமே கவனித்தால் எப்படி அவற்றைச் சரியாகச் செய்வதுஎனப் புரியும். முதலில் எப்படி ஒவ்வொரு சிறு காரியத்தையும்

(perfectஆக) சிறப்பாகச் செய்வது என விவரமாக முடிவுசெய்யவேண்டும். அம்முடிவு **மனத்தில் மகிழ்ச்சியாக மலரும்வரை பொறுமையுடன் பூரிக்க வேண்டும்**.

3 நாள் அதைப் பின்பற்ற ஆரம்பித்தால் தவறுஎன வரக்கூடாது.

வந்தால் அதிலிருந்து மீண்டும் 3 நாள் தொடர வேண்டும்.

இப்பயிற்சியை மேற்கொண்டபின் நம்மால் எந்த ஒரு சிறு காரியத்தையும் சரிவரச் செய்ய இயலாது, இதுவரை செய்யவில்லைஎனப் புரியும்.

கதவைச் சார்த்துவது, காரை ஸ்டார்ட் செய்வது போன்றவை சிறு வேலைகள். சத்தம் போடாமல், கதவு பொருந்தும்படி சார்த்த இயலாது; பெருமுயற்சி வேண்டும். கார் ஆடாமல் (jerk) ஸ்டார்ட் செய்ய பாதி பேரால் முடியாது. அவர்களாலும் ஜெர்க் இல்லாமல் நிறுத்த முடியாது. மேஜை மேல் தட்டு, டம்ளர் சத்தமில்லாமல் வைக்க பயிற்சி வேண்டும். தினமும் பரிமாறுபவர் கரண்டியில் சூடாக சாம்பார் எடுத்துப் பரிமாறுகிறார். ஒரு நாளைக்கு அந்த வேலையை நாம் செய்தால் சாம்பார் சிதறும், கை பிடிபடாது; பயிற்சி தேவை. நெடுநாளைய பயிற்சியின்பின் இவற்றைப் பாதிப்பேரே ஒழுங்காகச் செய்வார்கள். சாம்பாரை அழகாகப் பரிமாறுபவர் கவனம் முழுவதும் பரிமாறுவதிலிருக்கும். அவரால் அடுத்த ஒரு காரியத்தை அதேபோல் செய்ய முடியாது.

- ❀ நாள் முழுவதும் நாம் 100க்கு மேற்பட்ட காரியங்களைச் செய்கிறோம். ஒவ்வொன்றையும் சரியாகச் செய்ய வேண்டும்.
- ❀ சரியாகச் செய்ய முடிந்தால் படபடப்பு வரும். Relaxed சல்லிசாக இருக்க முடியாது. இயல்பாக, படபடப்பின்றி, அழகாக அனைத்துக் காரியங்களையும் முகமலர்ந்து செய்வது தெய்வஅம்சம்.
- ❀ அதை முயன்று, கவனித்து, பொறுமையுடன் பெற்று 3 நாள் பயிற்சியாக மேற்கொள்வது நாம் நம் நிலையை அடிமட்டத்தினின்று உச்சிக்கு உயர்த்துவதாகும்.
- ❀ இந்த நாளில் பேனாவுக்கு இங்க் போடவேண்டாம். பென்சில் சீவ வேண்டாம். அவை ஒருவர் நிதானத்தையும், திறமையையும் அளந்து காட்டும் செயல்கள்.



## 83. 3 மணி நேரம் மனத்துள் ஒரு குறையும் எழாதவாறு கட்டுப்படுத்து.

எப்பொழுதும் யார்மீதாவது குறை சொல்பவருக்கு உகந்த முறையிது.

குறையுடையவர் குறை சொல்வார்.

வாயால் சொல்லாமலிருந்தால் டென்ஷன் வரும்.

மனத்தால் சொல்லாமலிருந்தால் பயித்தியம் பிடிக்கும்.

குறையுடையவர் குறைசொல்வது அவர் வாழ்வு செவ்வனே நடக்க உதவும்.

அவர் குறைசொல்வதைத் தடுக்கக்கூடாது.

தாம் சொல்லும் குறையைக் கண்டு அவரே வெட்கப்பட்டு, குறை கூறக் கூடாதுஎன விரும்பினால், அவருக்கு உதவும் முறையிது.

கடலில் அலை எழுவதுபோல் மனத்துள் அவருக்குக் குறையெழும்.

'இதுதான் என் சுபாவம். எனக்கு இது வெட்கம் தருகிறது' என்பது முதற்படி.

அதை உணர்பவர் செய்யக்கூடியது என்ன?

அடுத்த முறை நம்மையறியாமல் குறை சொல்லும்பொழுது அதைக் கண்டு நாம் வெட்கப்பட வேண்டும்.

வெட்கம் பூரணமானால், துணி அவிழ்ந்தால் வெட்கப்படுவதுபோல் வெட்கப்பட்டால், இம்முறையை ஆரம்பிக்கலாம்.

அதன்பின் முடிவாகச் செய்ய வேண்டியது,

**யார் பிறர்மீது குறைசொல்வதையும் நாம் வாயாலோ, மனத்தாலோ கண்டிக்கக் கூடாது.**

அப்படிக் கண்டித்தால் குறை உள்ளே உயிரோடிருக்கிறதுஎனப் பொருள். இவரும் நம் போலிருக்கிறார்எனத் தோன்ற வேண்டும்.

**குறை கூறாத மனம் நிறையுடையதுஎன்று விளங்க வேண்டும்.**

அதன்பிறகு மனத்தைக் கட்டுப்படுத்த முயன்று 3 நிமிஷம், 10 நிமிஷம் என வளர்ந்து 3 மணி நேரம் மனம் அமைதி பெறுவது பயிற்சி முடிவது.

❀ ஏன் குறைசொல்கிறேன்என விளக்கத் தோன்றும்.

❀ இது சொல்ல வேண்டிய அவசியமாயிற்றேஎனத் தெரியும்.

❀ நம்மையும், நம் புதுமுடிவையும் மறந்து குறை கூறுவோம்.

❀ இயல்பாக எழுவதை எப்படித் தடுக்க முடியும்எனத் தோன்றும்.

❀ வெட்கப்படுவது, உஷாராக இருப்பது, இலட்சியம் நினைவில் இருப்பது அவசியம்.

❀ அப்படியிருப்பது மனம் கட்டுப்படுவது.

❀ மனம் குறை விஷயத்தில் கட்டுப்பட்டால் வேறொரு விஷயத்தில் ஓடும்.

❀ எந்த விஷயத்திலும் ஓடாதது அமைதி.

❀ குறை விஷயத்திலாவது கட்டுப்பட வேண்டியது அவசியம்.

❀ 3 மணி நேரம் கட்டுப்பட்டால் பிறகு பொதுவாகக் கட்டுப்படும்.

**84. பிறர் கர்மத்திற்குக் கருவியாகக் கூடாது. 1 வாரம் அல்லது 1 மாதம் அதைக் கடைப்பிடிக்கலாம்.**

நாம் கர்மத்திலிருந்து விலகுகிறோம். பிறர் கர்மத்தை ஏற்கலாமா?

சம்பாதிக்க முடியாதவன், படிப்பை முடிக்காதவன், திருமணமாகாதவன் பெரிய குடும்பங்களிலும், சிறிய குடும்பங்களிலும் இருப்பதுண்டு.

அத்தைமகளைத் தன்விருப்பத்திற்கு எதிராகச் செய்து வைத்ததால், திருமணத்தன்றே 'அவளுடன் வாழப் போவதில்லை' என்றான். சொல்லியவன் கல்லூரி ஆசிரியன். கடைசிவரை வாழவில்லை.

நிலைமை பரிதாபமானது. பலரும் மத்தியஸ்தம் செய்ய முன்வந்தனர்.

எவராலும் எதுவும் செய்ய முடியவில்லை. சர்க்காரில் டெபுடி டைரக்டராக இருந்தவன் பிரமோஷனில் சர்க்காருடன் கோபித்துக்கொண்டு ராஜினாமா செய்தான்.

ஓய்வுபெற வேண்டிய வயதிற்குமுன் இறந்துபோனான்.

இவனை மனைவியுடன் இணைக்க எவர் முயன்றாலும், இவனுடைய கர்மம் அவர்களுக்கு வரும். இவனுடைய கல்லூரி ஆசிரியர் முயன்றார்.



அவர் பையன் இவன்போல ஆனான். அவர் தம்பி அகால மரணமடைந்தான்.

இது நல்ல காரியமாயிற்றே செய்யக்கூடாதாஎன்பது கேள்வி.

அவனோ, அவன் மனைவியோ பிரச்சினையை அறிந்து, அதிலிருந்து மீள விரும்பி, நம்மை அணுகினால் செய்யலாம்; நாமே செய்யக்கூடாது.

பரம்பரை பட்டினியிருப்பவருக்குப் பஞ்சம் நீங்கி சுபிட்சம் வர முயன்றால் அவருடைய பஞ்சம் இரண்டு தலைமுறைக்கு செய்தவருக்கு வருகிறது.

சொந்த சுபாவத்தால் கெட்ட பெயர் வாங்கியவர்க்கு அகில இந்தியப் புகழ் தேடிக் கொடுத்தால் அவர் கெட்ட பெயர் இடம் மாறுகிறது.

கூலிக்காரன் மகன் குடித்தனக்காரனாக முயல்வதை, இது இவன் கர்மம்எனப் புரியாது, நடத்திக்கொடுத்தால் நாட்டை ஆள வேண்டிய அம்சம் உள்ளவருக்கும் நல்லது நடக்கத் தவறுகிறது.

இதைச் செய்ய முயல்பவர் குறைவு.

அவர்களுக்கு இந்த சந்தர்ப்பம் ஒரு நாளைக்கு 10 முறை வரும்.

அவர்களால் கட்டுப்படுத்த முடியாது.

1 மாதம் கட்டுப்பாட்டிலிருந்தால் நாம் எதிர்பார்க்கும் பலன் வரும்.

அவர்களால் ஒரு நாள், ஏன் ஒரு முறையும் தங்களைக் கட்டுப்படுத்த முடியாது.

சுபாவம் நம்மை மீறக்கூடியது.

நாம் சுபாவத்தை மீறுவது இலட்சியம்.

அது ஒரு வினாடியும் கட்டுப்படாதது. 1 மாதம் கட்டுப்பட்டால் பெரும் பலன் வரும்.

எந்த விஷயத்தில் சுபாவத்தைக் கட்டுப்படுத்தினாலும் இப்பலன் வரும்.

கர்மம் விஷயத்தில் சுபாவம் கட்டுப்படுவது மிகக் கடினம்.

கடினமான காரியத்தை அருள் சமாளிக்கும்.

அருளை அழைத்து கர்மத்தைக் கரைக்கலாம். நாம் அதில் தலையிடக் கூடாது.

**85. முடிவைத் தெளிவாக எடு - 1 வாரம்.**

முடிவெடுக்க முடியாதவரை முக்கியமான நேரத்தில் பார்த்தால் பரிதாபமாக இருக்கும். Chit fundஇல் சேரலாமா, வேண்டாமாஎன்பது சிறிய விஷயம்.

முடிவு எடுக்க முடியாதவருக்கு அது பாரமாகப் போகும்.

அது நாமேயானால் - நம்மால் முடிவு எடுக்க முடியாமற்போனால் - நமக்கு நிலைமை மிகத்தெளிவாக விளங்கும்.

இரண்டுவரன் வந்தபொழுது மனம் ஊசலாடும்.

இரண்டுவரனிடையே ஊசலாடும் மனம் காபி வேண்டுமா, டீ வேண்டுமா என்றும் அதேபோல் ஊசலாடும். ஊசலாடுவது மனம், ஊசலாட்டுவது விஷயம்எனத் தோன்றும்.

**ஆழத்தின் முடிவு மூலத்தின் முடிவு.**

இப்படிப்பட்டவர்க்கு தினமும் போராட்டம், எதிலும் போராட்டம்.

ஆயுள் முழுவதும் இவர்கள் அப்படியேயிருப்பார்கள்.

1 வார காலம் இவர்கட்கு நீண்ட காலம். அன்னையை ஏற்று, சிறு விஷயத்தில் - காபியா, டீயா - முடிவை ஆட்டங்காணாமல் எடுக்க ஆரம்பித்தால் **அன்னை ஆட்டத்தை அகற்றி, மனத்தில் நிம்மதி தருவதைக் காணலாம்**. அது வெற்றி.

அன்னையில்லாமல் இதே வெற்றிபெற ஒரு ஜன்மத்தில் முடியாது. 'இது என் சுபாவம், இனிமே மாறப்போகிறேனா?' என்பார்கள்.

அன்னையை நம்பினால் ½ நிமிஷத்தில் ஆட்டத்தை அகற்றுவார்.

'காபி, டீயும் வரனும் சமமாகுமா?'என மனம் கேட்கும். மனம் கேட்டவுடன் பதில் கூறும்வகையில் இரண்டுவரன் வரும். சற்று உள்ளே போய் கூர்ந்து பார்த்தால் முடிவு அதே ½ நிமிஷத்தில் எந்த வரன் வேண்டும்எனக் கூறும்.

காபி, டீயும் வரனும் ஒன்று என்று அன்னை காட்டுகிறார்.

இதுவரை நடந்தது அருள்.

இதை 1 வாரம் தொடர்ந்தால் ஊசலாடும் சுபாவம் ஆட்டத்தைக்



கைவிடுவது தெரியும். கிடைத்ததைப் பற்றிக்கொண்டால் பலன் உண்டு.

கிடைத்ததுமூலம் அன்னையைப் பற்றிக்கொண்டால் முடிவான பலனுண்டு.

1 வாரத்தில் 50 அல்லது 60 முறை முடிவுகள் எடுக்க வேண்டியிருக்கும்.

ஒரே வாரத்தில் நாம் புத்துயிர் பெற்று புது மனிதனாவோம்.

அன்னையை அறிந்த அன்பர்கள் சில நாட்களில் பெருமாறுதலடை-வதைக் கண்டு, பிறர் பேசுவதுண்டு.

விஷயம் சிறியதானாலும் மனம் ½ நிமிஷம் நிலைத்தால், அன்னை அதன் மூலம் செயல்படுவார். ஆடிக்கொண்டேயுள்ள பலகையில் சித்திரம் வரைய முடியாது.

முடியாத பெரும்பலனை முடிந்த சிறுகாரியம்மூலம்பெற அன்னையின் துணையுண்டு.

**சிறு காரியத்தில் பெருநெறி வெளிப்படும்.**

**86. கடன் பெறுவதைக் கொஞ்ச காலம் நிறுத்தி வை.**

கடன் பெறுவதுஎன்பது கடன் தேவைப்படுகிறது என்பதன்று - எவை கிடைக்கும் என்றாலும், அத்தனையையும் முழுக்க அனுபவிக்க வேண்டும் என்ற பேராசை.

ரூ.4000 சம்பளமுள்ளவர்க்கு மாநிலத்தில் பரவிய ஸ்தாபனத் தொடர்பு கிடைத்தவுடன் எத்தனைப் பேரிடம் அத்தொடர்பால் கடன் பெற முடியுமோ, அத்தனையும் பெற்றார்.

அது 4 இலட்ச ரூபாய். இதற்குக் கொள்ளையடிப்பதுஎனப் பெயர்; கடனில்லை. இவரால் கடன் கிடைக்கும்எனத் தெரிந்தால், 1 நாள் சும்மாயிருக்க முடியாது.

1 மணி நேரம் மனம் கட்டுப்படாது.

'பணம் தேவை' என்பது சாக்கு. எந்தப் பணமாவது, யாரிடமாவது பெற்று வாழ்வை அனுபவிக்க வேண்டும்என்ற ஆசை.

அந்த ஆசை 1 நிமிஷம் மனதில் கட்டுப்படாது.

அதைக் கண்டவர், 1 மாதம் கடன் பெறும் பழக்கத்தை நிறுத்தி வைக்க முடியுமானால், அந்த நேரம் அன்னையை இடைவிடாது அழைக்க முடியுமானால்,

- ❀ அவர் தரித்திரம் அதிர்ஷ்டமாகும்.
- ❀ அல்பமாகப் பிறரைக் கேலி செய்பவர், unhealthy curiosity என்ன விஷயம்எனக் கேட்டுத் துருவி அறிபவர், வாயைக் கட்ட முடியாதவர், தன்பெருமையை வாய் ஓயாது கூறுபவர் போன்றவரால் 1 மணி நேரம் அந்த சுபாவத்தை மனத்தில் கட்டுப்படுத்த முடியாது; செயலை 1 மாதம் தள்ளி வைக்க முடியாது.

  அது அவசியம்.
- ❀ நாரதரால் கலகத்தை உற்பத்தி செய்யாமலிருக்க முடியுமா?
- ❀ சிலருக்கு நாரதர் ராசியுண்டு. அவர் வந்து போனால் அவர் எதையும் கிளப்பாவிட்டாலும், அங்கு கலகம் பிறக்கும்.
- ❀ நிறுத்திவைப்பது சுபாவத்தை அறிய முற்படுவது.
- ❀ அதன்வழி அன்னை வாழ்வினுள் வர முடியும்.
- ❀ பொதுவாகக் கடன் பெறுவது, பெற்றதைத் திருப்பித் தருபவருக்கு இது பொருந்தாது.
- ❀ வாழ்நாளில் கடன்என வாங்கி நான் திருப்பிக் கொடுத்ததில்லை என்பவர்களையே நான் மனதில் கொண்டு எழுதுகிறேன்.
- ❀ அப்படி ஒருவரால் கொஞ்ச காலம் நிறுத்தி வைக்க முடியும் என்றால், அவர் வாழ்வில் அதன்பின் கடன் வாங்கும் சந்தர்ப்பம் எழாது.
- ❀ தவறான சுபாவம் நல்ல இராசியாகும் முறையிது. அன்பர்கட்கு மட்டும் கிடைக்கும் அரியவரம். வாழ்வில் இந்த வாய்ப்பில்லை.

***தொடரும்....***

தொடரும்....

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

# இரகஸ்யம் - The Secret

ஆஸ்திரேலியப் பெண் ஒருவர் வாழ்க்கையில் நலிந்தபின் ஆண்டவன் மீது நம்பிக்கை கொண்டு முன்வந்து, தம் அனுபவத்தால் பலரும் பலன் பெறும்படி நடந்து, அவற்றைத் தொகுத்து The Secret என்றொரு புத்தகம் வெளியிட்டார். அதைத் திரைப்படமாகவும் DVD வெளியிட்டார். 60 இலட்சம் பிரதிகள் விற்றன. உலகப் பிரசித்தி பெற்றார். ரூ.200 கோடி குறுகிய காலத்தில் சம்பாதித்தார். இது உலகெங்கும் பரவுகிறது. "நாம் பிரபஞ்சத்தின் பகுதி. நம்மால் முடியாததை, நமக்காகப் பிரபஞ்சம் நடத்திக் கொடுக்கும். அதற்குரிய உபாயங்களை நாம் ஏற்க வேண்டும்" என்று கூறுகிறார். இவர் கூறும் உபாயங்கள்: (1) பிரார்த்தனை, (2) பிரபஞ்சத்துடன் ஐக்கியமாவது, (3) கற்பனை செய்தல், (4) எண்ணத்தை எழுதி வைப்பது - வரி வடிவம், (5) பிரார்த்தனை பலித்தபின் வரும் சந்தோஷத்தை இப்பொழுதே அனுபவிப்பது, (6) பரவயப்படுதல், (7) நினைவை எண்ணத்தால் நிரப்புவதுபோன்றவை அதன் தத்துவம்.

- ✭ **கற்பனையில் பலிப்பது, நடைமுறையில் பலிக்கும்.**
- ✭ **நாம் பிரபஞ்சத்தின் பகுதிஎன்பதால் நம் ஆசைகளைப் பிரபஞ்சம் பிரார்த்தனை உருக்கமானபொழுது பூர்த்தி செய்யும்.**
- ✭ **வரி வடிவத்திற்கு உயிர் உண்டு.**
- ✭ **கற்பனைக்கு உயிர் உண்டு.**
- ✭ **ஆசை ஆர்வமானால், நினைத்தது பலிக்கும்.**

வீடு வாங்க ஆசைப்பட்டவர் தம் நினைவைப் படமாக எழுதினார். 5 ஆண்டு கழித்துப் பூர்த்தியானபொழுது அவர் படத்தில் எழுதியது போன்ற வீடே அவருக்கு அமைந்தது.

(இவரது website - http:\\the secret.tv).

❀❀❀

# தொலைந்த பொருள்

இதைப் பற்றி வந்த கடிதத்தின் (email) மொழி பெயர்ப்பைக் கீழே எழுதுகிறேன்:

"இரண்டு வாரம் முன்பு ஞாயிறன்று பாண்டியிலிருந்து கிளம்பும்பொழுது களைப்பு மேலிட்ட நேரம் என்னுடைய electronic disc drive*ஐத் தவறவிட்டேன். சென்னை வந்த பொழுது அதைக் காணோம். எங்கு தொலைந்ததுஎனத் தெரியவில்லை. சமர்ப்பணம் செய்து மறந்துவிட்டேன். இன்று மாலை பாண்டியிலிருந்து ஒரு தாசில்தார் என்னை போனில் கூப்பிட்டு, 'ஏதாவது பொருளைத் தொலைத்து விட்டீர்களா?' எனக் கேட்டார். 'அது டிஸ்கா?' எனவும் கேட்டுவிட்டு, அதை என் வீட்டில் புதுவையில் சேர்ப்பதாகச் சொன்னார். அந்த டிஸ்க்கில் நூற்றுக்கணக்கான கடிதங்கள் உள்ளன. ஒரு சிலவற்றில் மட்டும் என் பெயர் இருக்கிறது. தாசில்தார் அந்த டிஸ்கிலிருந்து எப்படி என் பெயரைக் கண்டுபிடித்தார்என்று எனக்கு ஆச்சரியம். அது 4,000 ரூபாய் பெறும். அதைப் பலர் திரும்பக் கொடுக்கமாட்டார்கள். எனது டிரைவரை நான் பாண்டிக்கு லீவில் அனுப்பியிருந்தேன். அவன் என்னை போனில் கூப்பிட்டு, 'அந்த டிஸ்க்கை கொண்டு வரட்டுமா?' எனக் கேட்டான். 'சரி' எனக் கூறினேன். என் டிரைவருக்கு டிஸ்க் விஷயம் தெரிய வந்தது எனக்கு ஆச்சரியம். டிரைவர் சென்னை வந்தபொழுது அவனுடைய நண்பன், வேறொரு டாக்ஸி டிரைவர், நான் தொலைத்த மறுநாள் காலையில் டிஸ்க்கை ரோட்டில் இருந்து எடுத்ததாகக் கூறியிருக்கிறான். டாக்ஸி டிரைவர் 10 நாள் வெளியூர் போய் திரும்பிய பின் இந்த தாசில்தாரிடம் விஷயத்தைக் கூறியிருக்கிறான். அவர் என்னைக் கூப்பிட்டார்".

- ✭ **தொலைந்த பொருளில் அன்னை செயல்படுவது பல வகையின.**
- ✭ **அதில் ஒரு முறை அப்பொருளுக்கு சம்பந்தப்பட்டவர்களை ஒன்று சேர்ப்பது.**
- ✭ **பொருள் மீண்டும் கிடைக்கும்பொழுது அன்னை செயல்பட்ட வழியை அறிவது அன்னையை மேலும் அறிய உதவும்.**

---

* கம்ப்யூட்டரிலிருந்து அடுத்த கம்ப்யூட்டருக்குச் செய்தி எடுத்துப் போவது, சாவிக்கொத்து போன்று 2" நீளமுள்ளது.

❀❀❀

June 2008 Jiviyam 14 Malar 2
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/06-08
Price: Rs.5/- WPP No.45/06-08

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

எங்கள் குடும்பம் (பாகம் 2) ரூ.250/-

உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் ரூ.100/-

யோக வாழ்க்கை விளக்கம் IV ரூ.150/-

பரம்பொருள் III ரூ.200/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

லைப் டிவைன் விரிவுரைகள்

*தமிழாக்கம்:* என். அசோகன் ரூ.100/-

SATYA JYOTHI

(CONCISE TRUISMS)

N.Asokan ரூ.200/-

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு, புதுச்சேரி
- 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191